சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 7	இதழ்: 04	செப்டம்பர் - 2025	விலை - ரூ.20/-
VOL:7	ISSUE: 04	September - 2025	Rs. 20/-



சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.850/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அரிய

பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"

* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.



* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI
ஆண்டு-7 மலர்-4 செப்டம்பர்-2025

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

எமது இறைவன்
ஸ்ரீ சாய்நாதர்
எமது சமயம்
சாய் சமயம்
எமது மந்திரம்
ஓம் ஸ்ரீ சாய்ராம்
எமது வேதம்
சாய் சத்சரிதம்
எமது புனித பூமி
சீரடி
எமது கொள்கை
எல்லாம் சாயி
எல்லாமே சாயி!

இதழ் வடிவமைப்பு
ஜெ.செந்தில்குமாரி

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்
9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு, அயனாவரம்,
சென்னை - 600023.
செல்: 99418 16692, 88258 31068

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி

அன்புக் குழந்தையே...

உன்னைச்சுற்றி இருப்பவர்கள் திடீரென தாழ்ந்து போகும்போதும், விழும்போதும், அழும்போதும் அது அவர்களின் கர்மாவினால் வந்தது என்பதை உணர்ந்து அமைதியாக இரு! எதைப்பார்த்தும் நீ பயப்படாதே! நான் எதுவரை உன் அசைக்க முடியாத நம்பிக்கையாக இருக்கிறேனோ அதுவரை உனக்கு எந்த தீங்கும் நேராது.

உனது கால்களும், கரங்களும் திடப்படுத்தப்படட்டும். உன்னை நம்பி வருபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுக்கு மனப்பூர்வமாக உதவி செய். திரும்ப வரும் என்று பலனை எதிர்பார்க்காதே! உன் மேல் பொறாமை உள்ளவர்களைப் பார்த்தும் உனக்கு விரோதமாக பேசித் திரிபவர்களையும் பார்த்து நீ ஒருபோதும் பயப்படாதே!

உனது வாழ்க்கையை ஒருபோதும் மற்றவர்களின் நிழலாக மாற்றிக் கொள்ளாதே! நீ தனித்தன்மையுடன் பிறந்தவன். இந்த உலகில் யாரும் உன்னைப் போல் இல்லை. இனியும் பிறக்கப்போவதில்லை. எனவே பிறர் சொன்னதைப் பின்பற்றி அவர்களை நகலெடுத்து வாழ்வதை விட்டுவிடு.

உன் உள்ளத்தில் இருந்து எழும் உண்மையான குரலைக்கேள். அது தான் எனது குரல். நானே உன் உள்ளிருந்து பேசுகின்றேன். அதன்படி நட, அதுதான் உன் இயல்பான தன்மை அந்த மூலத்தன்மையோடு வாழ்ந்தால் வாழ்க்கை ஆனந்தமாகவும் அழகாகவும் மாறும். என்னை மீறி யாரும் உன்னை நெருங்க முடியாது.

- பகவான் ஸ்ரீ சீரடி சாய்பாபா

ஆசிரியர் பக்கம்...

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!




பகவான் சாயிநாதரின் பேரருளால் எண்பத்து ஆறாவது இதழ் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். சென்ற மாதத்தின் 85 வது புத்தக வெளியீடு, 8 ஆம் ஆண்டு துவக்க விழா மற்றும், ஆசிரியர் யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய "மௌனத்தின் மூலம் தவம்" புத்தக வெளியீடு, என முப்பெரும் விழாவாக நடைபெற்றது.

10.08.2025 ஞாயிறு காலை 9 மணிக்கு சென்னை டி.நகர், கிருஷ்ண சுவாமி கல்யாண மண்டபத்தில் முப்பெரும் விழா கோலாகலமாகத் தொடங்கியது. விழாவிற்கு "வாழும் பாபா" சீரடிவாசி ஸ்ரீ அச்சு தானந்தா சுவாமிகள் அவர்கள் தலைமை தாங்க, செல்வி. அமிர்தா, செல்வி. அக்சயா, ஆகியோர் ஆத்ம ஞானப் பாடலை பாட, ஜெயலட்சுமி தேவக் குமார் குழுவினர்கள் சாயி பஜன் பாட விழா இனிதே துவங்கியது.

அதைத் தொடர்ந்து குரோம்பேட்டை தில்லை நாட்டியாலயா குழுவினரின் பரத நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.


இம்மாத இதழை வழக்கறிஞர் திருமதி. மாலினி கணேஷ் அவர்கள்





வெளியிட, ஸ்ரீ வல்லபானந்தமயி அம்மா பெற்றுக் கொண்டு சிறப் பித்தார்கள். விழாவில், திரு. ஏ.பி. மகாபாரதி, ஐ.ஏ.எஸ் (ஓய்வு), திரு. எஸ். இராமநாதன், கிரி டிரேடிங், "சாயிமா" கொரட்டூர் கிராஜா சாய்ராம்,

திரு. சுந்தர் சாய்ராம் மற்றும் ஏராளமான சாயி சொந்தங்கள்



பங்கேற்று சிறப்பித்தனர்.

சாய் தியானாலயா ஆத்ம ஞானியரின் அன்னதான குழுவினர் வந்திருந்த அனைத்து பக்தர்களுக்கும் அறுசுவை உணவளித்து மகிழ்ந்தனர்.

நமது சாயி மகராஜ் குருவைத் தேடி ஆன்மீக மாத இதழ் பல்வேறு தடைகளையும், பொருளாதார குறைபாட்டையும் கடந்து தொடர்ந்து எட்டாவது ஆண்டில் வெற்றிநடை போடுவதற்கு காரணம் முழுக்க முழுக்க பகவான் சாயிநாதரின் கருணையே! கலியுகத்தின் கண்கண்ட தெய்வமான சாயிநாதரின் அற்புத அதிசயங்களுக்கு இதைவிட சான்று ஏதுமில்லை.

இப்புத்தகம் ஆரம்பிக்கும் போதும் சரி, இப்போதும் சரி புத்தகத்திற்கென பொருளாதார வைப்பு நிதி ஏதுமில்லை. ஆசிரியராக யாம் எமது கையில்



இருந்து ஒரு ரூபாய் கூட முதலீடாக போடவில்லை. ஆயினும் பகவான் சாயிநாதரின் மகோன்னதமான கருணையினால் இது தொடர்ந்து நடந்து வருகின்றது.

மாதந்தோறும் 5000 காப்பிகள் அச்சடிக்கப்பட்டு, சந்தாதாரர்கள் 300 நபர்களைத்தவிர ஏனைய காப்பிகள் அனைத்தும் இலவச மாகவே தமிழகத்தின் அனைத்து சாயி ஆலயங்களுக்கும் அனுப்பப் படுகின்றன. மொத்தத்தில் லாபத் திற்காக இந்த புத்தகம் நடத்தப் படவில்லை. இனியும் நடக்காது.

முழுக்க முழுக்க இது சாயி சேவையாக மட்டுமே நடந்து வருகின்றது, இனியும் நடக்கும்.

எனவே இதைப்படிக்க நேரும் சாயி பக்தர்கள் இந்த சாயி கைங் கரியம் தொடர்ந்து நடைபெற தங்களால் இயன்ற நன்கொடை களை வழங்கி உதவலாம். இல்லை யெனில் புதிய சந்தாதாரர்களை இணைத்து இதழ் தொடர்ந்து வெளிவர எங்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் கொடுக்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள் கின்றோம்.

ஆம்பூரைச் சேர்ந்த மருத்துவர் திரு. ஆர். ஹரிராம் அவர்கள் குருவின் உணர்தலின் மூலம் நமது இதழுக்கு மாதம் ஒரு சந்தாதாரரை இணைக்க வேண்டும் என்ற உந்து தல் ஏற்பட்டு இம்மாதம் ஒரு வருட சந்தாதாரர் ஒருவரை இணைத்து சாயி சேவை புரிந்துள் ளார். அவர்களும், அவர்களது இல்லறத் தார் அனைவரும் பகவான் சாயி நாதரின் ஆசி பெற்று அனைத்து நலன்களுடன் வாழ்க வளமுடன் என வாழ்த்துகின்றோம்.

பகவான் சாயிநாதரின் பேரரு ளால் அனைவரும் அனைத்து நலன் களும் பெற்று உலக மாந்தர்கள் அனைவரும் இயற்கை பேரிடர், போர், பகை அச்சமின்றி ஆரோக்கி யத்துடன், மன அமைதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கின்றோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

சீரடி சாயிநாதரின் புகழ் பரப்பும் மாத இதழில் விளம்பரம் செய்து சாயிநாதரின் ஆசியைப் பெற்று உங்களது வியாபாரத்தில் மேன்மேலும் வளர்ச்சியடையுங்கள்.

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே!

உங்களது நிறுவனங்கள், தயாரிப்புகள், மற்றும் உங்கள்



வீட்டு பிறந்தநாள், திருமணநாள், விஷேசங்கள், தொடர்பான விளம்பரங்களை குறைந்த செலவில் வண்ணத்தில் பிரசுரித்து பயனடையுங்கள்.

குறைக்கப்பட்ட கட்டணங்கள்

பின் அட்டை கலர் முழுபக்கம்	ரூ.3000
நடுப்பக்கம் கலர் முழுபக்கம்	ரூ.2000
நடுப்பக்கம் கலர் அரைபக்கம்	ரூ.1000
கறுப்பு/ வெள்ளை முழு பக்கம்	ரூ.1500
கறுப்பு/வெள்ளை அரைபக்கம்	ரூ.750

குறிப்பு: சாயி சொந்தங்களுக்குள் திருமண பந்தத்தில் இணைய விரும்பும் மணமக்களுக்காக "வரன் தேவை" அரை பக்க வண்ண விளம்பரம் ரூ.500 மட்டுமே!

– வே.ஸ்ரீராம்

சாய் சரிதம்-18

கதை வழியில்

எனது கதைகளை உங்களது உள்ளத்தில் பதிவேற்றுங்கள். ஒவ்வொரு கதையும் தரும் குறிப்பு நுட்பத்தை நன்றாகப் பிடித்துக் கொள்ளுங்கள். அதனால் உங்களது மனத்தின் பதைபதைப்பு மறைந் தொழியும். உங்களுக்கு உண்மையான சாந்தியும் அமைதியும் கிடைக்கும். எனது கதைகள் உங்களுக்கு உண்மையான வழியைக் காட்டி ஆசீர்வதிக்கும்.

– ஸ்ரீ சீரடி சாய்பாபா


மசூதியில் மத்தியான ஆராத்தியும் வழிபாடும் ஆரம்பிப்பதற்கான மணி அடிக்கத் தொடங்கியதும் நானும், சாமாவும் மசூதியை நோக்கி விரைந்தோம்.

மசூதியில் பாபு சாகேப் ஜோக் அப்போதுதான் பாபாவிற்கு வழிபாடு செயயத்தொடங்கியிருந்தார். மசூதியின் மேல்தளத்தில் பெண்களும், கீழ் தளத்தில் ஆண்களும் நின்றுகொண்டு ஆரத்தியை மேளதாளத்துடன் பாடிக்கொண்டிருந்தனர். சாமா என் கைகளைப்பிடித்து இழுத்துக் கொண்டு கூட்டத்தை விலக்கிக்கொண்டு மசூதிக்குள் சென்று பாபாவின் வலது புறம் அமர்ந்தார். நான் பாபாவின் முன்னால் அமர்ந்துகொண்டேன்.



எங்களைப் பார்த்ததும் பாபா என்னிடம், சாமாவிடம் தட்சிணை வாங்கிவிட்டாயா? எங்கே எனது தட்சிணை கொடு என்று கேட்டார். நான் உடனே, பாபா சாமாவிடம் பணம் ஏதும் இல்லையாம். அதனால் அதற்கு பதிலாக நமஸ்காரங்களை அளித்ததாகவும் கூறினேன்.

அதற்கு பாபா, நல்லது. ஆமாம் நான் சாமாவிடம் சற்று நேரம் பேசி



வசதியாக அமர்ந்து கொண்டார்.

நான் சாமா வீட்டில் நடந்த அனைத்தையும் பாபாவிடம் கூறினேன். குறிப்பாக சாமா வீட்டில் நடந்த கதைகளின் மூலம் என்னை நீங்கள் ஆசீர்வதித்ததாகவே கருதுகிறேன் என்று பாபாவை நமஸ்கரித்தேன். பாபா என் தலையில் கையை வைத்து, சாமா கூறிய கதைகள் உனது உள்ளத்தில் பதிந்ததா? அதன் குறிப்பை நீ அறிந்து கொண்டாயா என்று கேட்டார்.

ஆமாம் பாபா எனது அகங்காரத்தை அகற்றுவதற்காக நீங்கள் என்னை சாமா வீட்டிற்கு அனுப்பியதை இப்போது உணர்ந்து கொண்டேன். பாராயணம் செய்வதில் திரு. ஸாடேவிடம் இருக்கும் ஒழுங்கு என்னிடம் சுத்தமாக இல்லை என்பதை நன்கு உணர்ந்து கொண்டேன்.

இப்போது என்னிடம் இருந்த படபடப்பு நீங்கியது பாபா, என்னை மன்னித்து விடுங்கள் என்று மீண்டும் நமஸ்கரித்தேன்.

அவரின் பாதங்களில் இருந்து என் தலையை நிமிர்த்திய பாபா இவ்வாறு கூறினார். நான் எனது விட்டுவா என்றேனே, பேசினாயா என்று கேட்டார். நான், ஆமாம் பாபா பேசினேன் என்றேன். உடனே பாபா, அப்படியா! சரி நீங்கள் இருவரும் என்ன பேசினீர்களோ அதை அப்படியே எனக்குச் சொல் என்றார்

பாபாவைச்சுற்றி மணியோசை, மேளதாளங்கள், கோஷ்டிகானம் எல்லாம் காதை செவிடாக்கின இருப்பினும் பாபா கேட்க ஆர்வமாக இருந்ததால் நானும், சாமா வீட்டில் நடந்த கதைகளை கூற ஆரம்பித்தேன். பாபாவும் கேட்பதற்கு வசதியாக எனக்கு முன்னால் சாய்ந்து கொண்டு

பக்தர்களை வழிநடத்துவது மிகவும் தனித் தன்மையானது.அதைப் புரிந்து கொண்டால் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

ஆன்மாவைப் பற்றிய ஞானத்தை அடைவதற்கு தியானம் மிகவும் அவசியமானது. நீங்கள் தொடர்ந்து தியானம் செய்துவந்தீர்களேயானால் உங்களுக்குள் எழும் எண்ணங்கள் மெல்ல, மெல்ல குறையும். எனவே ஆசைகளை குறைத்துக்கொண்டு எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் இறையின் மீது கவனத்தை வைத்து தியானம் செய்யுங்கள். மனம் ஒருமுகப்பட்ட பின்பு உங்களது குறிக்கோள் எண்ணவோ அது கண்டிப்பாக நிறைவேறும்.


எல்லாவற்றிலும் ஞானமே பேரானந்தம் தருவதும், முதன்மையானதுமாகும். எனவே எனது உருவமற்ற இயல்பை தியானம் செய்யுங்கள். அதை உங்களுக்கு செய்ய முடியவில்லை என்றால் இங்கே துவாரகாமாயியில் நீங்கள் காண்கின்ற ரத்தமும் சதையுமான எனது ரூபத்தை உச்சி முதல் உள்ளங்கால் வரை ரசித்துப்பார்த்து தியானம் செய்யுங்கள்.

உங்களது கவனம் எனது உருவத்திலேயே குவிந்திருக்கும் போது, உங்கள் மனதிலே வேறு எண்ணங்கள் தோன்றாது. அப்போது மனம் எனது உருவத்திலேயே லயித்துவிடும். அப்போது தியானம் செய்யும் நீங்கள், தியானிக்கப்படும் பொருளாகிய நான் என்பதுவும் மறைந்துவிடும். எஞ்சியிருப்பது தியானம் மட்டுமே! அதையும் நீ செய்ய முடியாது. அது ஏற்கனவே இருக்கிறது என்று உணர்ந்து கொள். அதனோடு கரைந்துவிடு. பிறகு என் ரூபமும் உனக்கு தேவைப்படாது.

தாய் ஆமை முட்டையிட்டு விட்டு எதிர்கரையில் காத்திருக்கின்றது. குஞ்சுகள் பிறந்ததும் அவைகளுக்கு ஆமை பாலோ, உஷ்ணமோ அளிப்பதில்லை. ஆனால் தாய் ஆமை எதிர்கரையில் இருந்து குஞ்சுகளை கவனித்துக் கொண்டே இருப்பதைத் தவிர வேறு ஒன்றையும் செய்யாது. அதுவே குட்டிகள் வளர சூட்சுமமாய் உதவி புரிகின்றன. குஞ்சுகளும் எதிர்கரையில் இருந்தே தனது தாயாரை நினைவில் வைத்திருப்பதைத் தவிர வேறு ஒன்றையும் செய்யாது அதுவே தியானம். குருவுக்கும் சீடனுக்கும் இடையில் உள்ள உறவு அத்தகையாகும்.

பாபா என்னிடம் இம்மொழிகளைக்கூறி முடிக்கவும், ஆரத்தி கோஷ்டி கானம் நிறைவடையவும் சரியாக இருந்தது. அனைவரும் உரக்க ஒரே குரலில், சச்சிதானந்த சொரூபியாய் இருக்கின்ற சத்குரு சாய்நாத் மகராஜுக்கு ஜே என்று பெரும் கோஷம் எழுப்பினார்கள்.

இதைபடிக்கும் பேறு பெற்ற வர்களே நீங்களும் என்னுடன் மசூதியில் இருப்பதாக நினைத்துக் கொள்ளுங்கள். இதோ மசூதியில் ஒளிமயமாக அமர்ந்திருக்கும்



சாய்நாத் மகராஜுக்கு நீங்களும் எங்களுடன் சேர்ந்து ஜய கோஷம் இடுங்கள். சாய்நாத் மகராஜுக்கு ஜே!

ஆரத்தி சடங்குகள் நிறை வடைந்தவுடன் பாபு சாகேப் ஜோக் பாபாவை வணங்கி அவரின் கை நிறைய கற்கண்டு பிரசாதத்தினை வைத்தார். பாபா அதை அப்படியே எனது கைகளில் திணித்து இங்கு நடந்தவைகளை நன்றாக நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இந்த கற்கண்டைப்போலவே உங்களது எல்லா விருப்பங்களும் நிறைவேற்றப்படும். அனைவரும் மிகுந்த சந்தோசத்தை அனுப விப்பீர்கள் என்று கூறினார்.

நான் உடனே சற்று உணர்வு வயப்பட்டு, பாபாவின் பாதங்களில் விழுந்து அதை இறுக்கிப் பிடித்துக்கொண்டு, நான் அறியாது செய்த தவறுகளை மன்னித்து என்னை ஆசீர்வதித்து ஏற்றுக் கொள்ளுங்கள் பாபா. என்னை எப்போதும் காப்பாற்றுங்கள் என்று கெஞ்சினேன்.

பாபா என் முதுகில் தட்டிக் கொடுத்து, எப்போதும் நான் கூறும் கருத்துக்களை மேம்போக்காக அறிந்து கொண்டு அது சரியா, தவறா என்று வாதம் செய்து காலத்தை கடத்திக்கொண்டிருக்காதீர்கள். அதன் மெய்பொருளை ஆராய்ந்து மனதில் ஏற்றிக்கொள்ளுங்கள். எக்காலத்திலும் நான் உங்களுடனே வசிப்பேன். அப்போது நீங்கள் என்னுடனே தியானம் செய்து ஆனந்தமாக வாழ்வதை உணர் வீர்கள். என்று கூறினார்.

அப்போது ஆரத்தி முடிந்து விட்டதனால் மக்கள் கலைய ஆரம்பித்துவிட்டனர். அவர் அருகில் நானும், சாமாவும் மட்டும் இருந்தோம் அப்போது பாபா மேலும் கூறினார், என்னுடைய மொழிகள் உங்களுக்கு எப்போதும் நன்மை அளிக்கும். " ஏதேனும் உறவோ, தொடர்போ இல்லை என்றால் ஒருவரும் எங்கும் செல்வ தில்லை".

ஏதேனும் சீவராசிகளோ, மனிதர்களோ உங்களிடம் வர நேர்ந்தால் அவர்களை பண்பின்றி விரட்டிவிட வேண்டாம். அவர் களை அன்புடன் வரவேற்று உரிய

மரியாதையுடன் நடத்துங்கள். தாகமாய் இருப்போருக்கு தண்ணீர் கொடுங்கள். பசியாய் இருப்போருக்கு உணவு கொடுங்கள், ஆடையற்றவர்களுக்கு ஆடை கொடுங்கள், இளைப்பாறுவதற்கு இடமில்லாதபோது உங்களது வீட்டு திண்ணையைக் கொடுங்கள். இவ்விதம் நீங்கள் இருக்கும்போதெல்லாம் இறைவன் மிக்க மகிழ்ச்சி கொள்ளுவான்.

யாராவது உங்களிடம் பணம் கேட்டு உங்களுக்கு கொடுக்க மனமில்லை என்றால் கொடுக்க வேண்டாம். ஆனால் அவரைப்பார்த்து நாயைப் போன்று குரைக்காதீர்கள். யாராவது உங்களைப்பற்றி தவறான செய்திகளை கூறினாலும், பரப்பினாலும் அவர்களின் மீது கோபப்படாதீர்கள். அவர்களுக்கு பதில் கொடுக்கும்படி எதையும் பேசாதீர்கள். இம்மாதிரியான விசயங்களை நீங்கள் சகித்துக் கொண்டிருந்தீர்கள் என்றால் உங்களது ஆன்மா நிச்சயம் மகிழ்ச்சியாக இருக்கும்.

உலகம் தலைகீழாக மாறட்டும். நீங்கள் இருந்த இடத்திலேயே இருங்கள். உங்கள் வேலை எதுவோ அதை சரியாக செய்து கொண்டே இருங்கள். உங்கள் முன்னால் கடந்து செல்லும் காட்சியினை அமைதியுடன் கவனித்து கொண்டிருங்கள்.

உங்களிடமிருந்து என்னை பிரிக்கும் வேற்றுமைச் சுவரை இடித்துவிடுங்கள். பின்னர் நமது



சந்திப்புக்கு எந்தத் தடையும் இருக்காது.

நான், நீ என்ற வேறுபாட்டுணர்வே குருவிடம் இருந்து சீடனை பிரிக்கும் தடைகளாகும். அது அழிக்கப்பட்டாலே அன்றி குருவுடன் ஐக்கியமாதல் என்பது நடக்காது. கடவுளே சகலத்திற்கும் ஒரே உரிமையாளர். அவர் வேலை செய்யும் முறை அபாரமானது. எதனாலும் மதிப்பிட முடியாதது. நிச்சயமாக நமது அறிவால் அறிய முடியாது.

யார் என்ன முடிவெடுத்தாலும், இறைவனுடைய முடிவே இறுதியாகும். அவர் நமக்கு வழி காட்டுவார். நமது உள்ளத்தின்

ஆசைகளை பூர்த்தி செய்வார். முன் சென்மத்தின் தொடர்புகளாலேயே நாம் இணைந்துள்ளோம். நாம் ஒருவருக்கொருவர் சேவை செய்து மகிழ்ச்சியுடன் இருப்போம். எவன் இவ்விதமான உயர்ந்த குறிக்கோளை எய்துகின்றானோ அவனே இறவாப் புகழுடையவன். மற்றவர்கள் எல்லாம் வெறுமனே மூச்சு வரைவரை வாழ்பவர்களே என்று கூறினார்.

அன்புடனும், முழுமையான பக்தியுடனும் பாபாவிடம் சரணடைந்தவர்களின் நல்ல எண்ணங்களை பாபா எப்படி ஊக்குவிக்கின்றார். எப்படி நடத்தி வைக்கின்றார் என்பதை எனக்கு ஏற்பட்ட இரண்டு அனுபவங்களைக்கூறி இவ்வத் தியாயத்தை முடிக்கின்றேன்.

தூக்கத்தில் இருந்து எழுந்த வுடன் உங்களுக்கு ஏதாவது நல்ல எண்ணம் எழுந்தால் அதைப்பற்றி நீங்கள் ஆழமாகச் சிந்திக்க, சிந்திக்க பகல் பொழுதிற்குள் அது அப்படியே நிறைவேறும். அதுவே உங்களது மனதின் அறிவுத்திறன். ஆகவே மனதினை நல்லவைகளுக்கு பழக்கப்படுத்துங்கள். என்பதை நான் எப்போதோ படித்திருக்கின்றேன். அதை பயன்படுத்திப்பார்க்க ஆசைப்பட்டேன்.

இன்று புதன் கிழமை இரவு உறங்கப் போகும் முன் இராம நாமத்தை நினைவுபடுத்திக் கொண்டே உறங்குவோம். நாளை புனிதமான வியாழக்கிழமை. நாளை முழுவதும் இராமனைப் பற்றிய செய்திகளே என்னை வந்தடையட்டும் என்றவாறே ராமா, ராமா என்று உச்சரித்த படியே உறங்கிப் போனேன். விடிற்காலையில் நான் எழுந்து கொண்டபோது என்னையறியாமல் ராமா என்று கூறியபடியே எழுந்து கொண்டேன்.

பின்னர் காலைக்கடன்களை முடித்து குளித்துவிட்டு பாபாவைக் காண மலர்களுடன் தீட்சித் வாடாவில் இருந்து புறப்பட்டு மசூதிக்கு வந்தபோது அந்த நேரத்தில் பாபாவின் முன்னால் ஔரங்காபாதர் எனற அடியவர் ஏகநாதரின் ஓர் அழகிய பாடலை பாடிக்கொண்டிருந்தார். அது " குரு கிருபாஞ்ஜன் பாயோ மேரி பாயி" என்ற பாடல்.

அந்தப்பாடலின் அர்த்தம் என்னவென்றால்,

குருவின் கிருபா கடாச்சம் எனக்குக் கிடைத்தவுடன் என் ஞானக்கண்கள் திறந்துகொண்டது. அதற்குப்பின் இராமபிரான் என் அகத்தும் புறத்தும், கனவிலும், விழிப்பிலும், எல்லா இடங்களிலும் இராமரையே காணச் செய்தது. என்பதே! எவ்வளவோ தெய்வத்தின் மீது ஆன்மீகப்பாடல்கள் இருக்கின்றன. ஆனால் இந்தக்குறிப்பிட்ட பாட்டை தேர்ந்தெடுத்து ஏன் ஔரங்காபாதர் பாடவேண்டும்.

பகல்பொழுது எல்லாம் இராமபிரானின் நாமத்தையே இடைவிடாமல் பாட வேண்டும்

என்ற எனது எண்ணத்திற்கு ஊக்கமளிக்க வேண்டும் என்று பாபாவால் ஏற்பாடு செய்யப் பட்டது தனித்தன்மை வாய்ந்த நிகழ்வல்லவா?

ஒருமுறை பாபாவின் தரிசனத் திற்கு வந்த ஒரு பக்தர் தன் அருகில் இருந்தவரிடம் அவருக்கு பிடிக்காத ஒருவனைப்பற்றி புறங்கூறிக்கொண்டே இருந்தார். பிறகு பாபா லெட்டித் தோட்டத்திற்கு சென்றார். அந்த பக்தரும் கூட்டத்தோடு கூட்டமாக பாபாவுடன் லெண்டித் தோட்டத்திற்கு சென்றார். ஆனால் அங்கும் அவர் தனது நண்பரிடம் அங்கு இல்லாத ஒருவரைப் பற்றி புறங்கூறிக்கொண்டே இருந்தார்.

பாபா திடீரென அந்த மனிதனை கூப்பிட்டார். அவன் தோளின் மீது கை போட்டபடி தனியாக கூட்டிச்சென்று, அங்கே ஓரமாக மலத்தை தின்று கொண்டிருக்கும் ஒரு பன்றியை சுட்டிக்காட்டி, அங்கே பார் அந்த பன்றி மலத்தை எவ்வளவு ருசித்து தின்கின்றது பார். உனது நடவடிக்கையும் அப்படித்தான் இருக்கின்றது. உன்னை வந்ததில் இருந்து பார்த்துக் கொண்டே இருக்கின்றேன். உனது தோழர்களை குற்றம்கூறி திட்டிக்கொண்டே இருக்கின்றாய். உனது நல்வினையின் காரணமாக நீ மனிதனாகப் பிறந்திருக்கின்றாய். நீ இவ்வாறு நடந்து கொண்டால் இந்த சீரடி உனக்கு எப்படி உதவி செய்யும். என்று அவனுக்கு



அறிவுரை வழங்கினார்.

இவ்விதமாக பாபா அவசியம் ஏற்பட்ட போதெல்லாம் அறிவுரை களை வழங்கிக் கொண்டே இருந்தார். இறப்பு, பிறப்பு என்னும் பிறவித்தொடரை அறுத்து அமைதியுற வேண்டியவன், நேர்மையான வாழ்க்கை நடத்த வேண்டும். அமைதியாகவும், கட்டுப்பட்ட மனதுடனும் இருக்க வேண்டும். யாரையும், மனதை புண்படுத்தும்படி வெடுக்கென்று பேசக்கூடாது. எப்போதும் நல்வினைகளில் தன்னை ஈடுபடுத் திக்கொள்ள வேண்டும்.

அடுத்தவர் கூறாமல் நீங் களாகவே பாபாவை முழுமையாக

உயிராலும், உள்ளத்தாலும் சரணாகதியடைந்து அவரது லீலைகளை கேட்டு, அதைத்தவிர வேறெதையும் சிந்திக்காதவன் ஆத்மானுபூதியை அடைவது உறுதி. ஆயினும் நான் யார்? என்று அறிய விரும்பியவர்களுக்கு ஆன்ம பயிற்சியையும், தியானத்தையும் அவர் அறிவுறுத்தினார்.

சிலரை கடவுள் பெயரை நினைவில் வைத்துக்கொள்ளும் படியும், சிலரை அவரது லீலைகளை நினைவில் வைத்துக் கொண்டிருக்கும்படியும், சிலரை தமக்கு பாத பூஜை செய்யும்படியும், சிலரை இராமாயணம், ஞானேஸ்வரி போன்ற நூல்களை படிக்கும்படியும் அறிவுறுத்தினார். சிலரை தமது பாதத்தருகில் அமர வைத்தார். சிலை கந்தோபா கோயிலுக்கு அனுப்பி வைத்தார்

சிலரை விஷ்ணு நாமங்களை செபம் செய்ய வைத்தார். சிலரை உபநிஷதம், கீதை போன்ற நூல்களை கற்க வைத்தார்.

அவரது உபதேசங்களுக்கு எந்த வரைமுறையும் இல்லை. சிலருக்கு நேரிடையாக உபதேசித்தார். சிலருக்கு கனவில் உபதேசித்தார். அவரது எல்லா வழிகளையும், செயல் முறைகளையும், நாம் முழுமையாக புரிந்து கொள்ளவோ, விவரிக்க இயலாது. எனவே மிக எளிதான வழி அவரையே முழுமையாக நம்பிக்கையுடன் சரணாகதியடைவதே!

தொடரும்

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன்
M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. **வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.**

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் தனது வாட்அப் தளத்தில் தினந்தோறும் ஒரு பொன்மொழியை பதிவிடுவதை வழக்கமாக வைத்திருக்கின்றார். அதை வலைத்தளவாசிகள் தினந்தோறும் வாசித்து மகிழ்கின்றனர். அந்த பொன் மொழிகளை வாசகர்கள் அனைவரும் படித்து மகிழவேண்டும் என்று தேதி வாரியாக தொகுத்து வழங்குகிறேன். வாசகர்கள் படித்து பயன்பெற வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.



யோகி ஸ்ரீராம் பாபாவின்

இனிய மொழிகள்

01.07.25

இறைச்சிந்தனையின் மூலம் உங்கள் மனம் என்னும் கண்ணாடியை அன்றாடம் சுத்தம் செய்யுங்கள். அது உங்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஒளி வீசட்டும்.

02.07.25

இறைவனின் திட்டத்தை உணராதவன் எவனோ அவனே தான் போடும் திட்டமே வெற்றி பெறும் என்று கனவு காண்பான்.

03.07.25

நம்மை தவறாக நினைப்பவரை நாம் தடுக்க முடியாது. ஆனால் நாம் அடுத்தவரை தவறாக நினைப்பதை தடுத்துக்கொள்ள முடியும் அல்லவா?

04.07.25

வாழ்வு விலகிக்கொண்டிருக்கின்றது. மரணம் வந்து கொண்டிருக்கின்றது. வாழ்க்கையைப் பற்றி யோசிப்பதை விட்டுவிட்டு மரணத்தைப் பற்றி யோசியுங்கள். வாழ்க்கை அழகாகும்.

05.07.25

இறைவனுடைய செயல்களையும், திட்டங்களையும் நீங்கள் புரிந்து கொள்வது மிகவும் சிரமம். நீங்கள் அலைபாயும் மனதுடனும், தடுமாற்றத்துடனும் இருக்கும் போது அது இன்னும் கடினமாகி விடும். காரணம் இன்றி காரியம் இல்லை என்பதை புரிந்து கொண்டால் அனைத்து சந்தேகங்களும் மறைந்து விடும்.

06.07.25

சிரிப்பு மனித குலத்திற்கு மட்டுமே சொந்தமானது. நீங்களும் சிரித்து, மற்றவர்களையும் சிரிக்க வையுங்கள். அதை விடுத்து

தொகுப்பு: ஜெயந்தி ஸ்ரீராம்

உங்களின் அயர்ச்சி தரும் உபதேசம், புலம்பல், துன்பம் இவற்றால் உலகத்தை அதிக கவலையில் ஆழ்த்தாதீர்கள்.

07.07.25

யாரிடமும், எங்கேயும், எப் போதும் அன்பை எதிர்பார்க்கா தீர்கள். அன்பை பெறுவதும் கொடுப்பதும் உணர்வின் நிலை. அன்பாய் மாறிக்கொள்வதே அறிவின் நிலை. எனவே நீங்கள் போகும் இடமெல்லாம் அன்பை விதைத்துச் செல்லுங்கள். எங்கேனும், எவராவது அறுவடை செய்து கொள்ளட்டும்.

08.07.25

உங்கள் வாழ்க்கையில் சந் தேகங்களுக்கு இடமளிக்காதீர்கள். சந்தேகங்கள் உங்களை அழித்து விடும். சந்தேகத்தை விட்டுவிட்டு அன்பை வளர்த்துக்கொள்ளுங்கள். சத்தியத்தின் பாதையில் நடந்து தெய்வீகத்தை உணர்ந்து அனுபவி யுங்கள். அதுவே உண்மையான ஆன்மீகம் ஆகும்.

09.07.25

அன்பை யாரிடமும் காட்ட வேண்டிய அவசியமில்லை. அன்போடு இருந்தாலே போது மானது. பாம்பிடம் அன்பாக இருக்கலாம். அதற்காக அதை தூக்கி மேலே போட்டுக் கொண்டு அன்பை காட்ட வேண்டியதில்லை.

10.07.25

உங்களுக்குள் தோன்றும் எண் ணங்களே உங்களது வாழ்க்கையை நிர்மாணிக்கின்றன. எனவே எண்ணங்களின் மீது கவனம் வையுங்கள். மிக மோசமான பகைவன் அதுவே.

11.07.25

நீ கூறும் நல்ல கருத்துக்களை இந்த உலகம் ஏற்றுக்கொள்ளாத போது, இந்த உலகம் கூறும் கருத்துக்களை நீ ஏற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை!

12.07.25

ஒருவரை புகழ்துரைக்க காரணங்கள் தேவையில்லை. குற்றம் சொல்ல காரணங்கள் கட்டாயம் தேவை. எதுவரினும் குற்றம் கடிவோம். நல்லன நாடிச் செய்வோம்.

13.07.25

உங்கள் உறவுகளின் மீது உங்க ளுக்கு அதிகப் பற்றிருக்கும் வரை, உங்களால் உங்களுக்கு ஏற்படும் பிரட்சனைகளை தவிர்க்க முடியாது.

14.07.25

உறவுகளோடு பழகுவது என்பது நெருப்பு ஆற்றின் மீது மயிர் பாலத்தில் நடப்பதைப் போன்றது. உணர்வுகளோடு செயல்படாமல், அறிவோடு செயல்பட்டால் ஆற்றைக் கடக்கலாம்.

15.07.25

எல்லா மதங்களும், எல்லா வேதங்களும் ஒன்றை நோக்கியே செல்கின்றன என்று உணர்பவனே ஞானி. எனவே உங்களது எல்லா

காரியங்களிலும் இரண்டை விடுத்து ஒன்றையே கைகொள்ளுங்கள்.

16.07.25

ஆக்கச்சிந்தனையோடு வாழுங்கள். ஆக்கச்சிந்தனை ஊக்கத்தையும், உயர்வையும் வளர்க்கும். பிறரைக்காட்டிலும் அதிகமாக உழைக்கக் கற்றுக்கொள்ளுங்கள். சந்தோசமாக வாழ முயற்சிக்காதீர்கள். நிம்மதியாக வாழ முயற்சி செய்யுங்கள்.

17.07.25

நாக்கு இரண்டு வேலைகளுடன் தொடர்புடையது. ஒன்று பேச்சு, இரண்டு, உண்பது. அதிகம் பேசினால் செயற்கையாகப் பசிக்கும். நிறைய சாப்பிட்டால் உணர்வுகள் கட்டுக்கடங்காமல் போகும். பின்பு நிலமை கைமீறிப்போய்விடும். என்வே மௌனம் பழகுங்கள்.

18.07.25

குரு உங்களுக்கு ஆறுதல் சொல்வதையோ, உங்களுக்கு ஏற்படும் துன்பத்தை மாற்றவோ ஒருபோதும் விரும்புவதில்லை. அவர் உங்களையே மாற்ற விரும்புகின்றார். எனவே உங்கள் துன்பத்தை மாற்ற முயற்சிக்காதீர்கள். உங்களையே மாற்ற முயற்சியுங்கள். அப்போது பூரணமாக குருவருள் சித்திக்கும்.

19.07.25

வெளியில் இருந்து ஞானத்தை உள்ளே திணிக்க முடியாது. உங்களுடைய அகக் கிரகிப்புத்தன்மையின் அளவும், ஆற்றலும் தான் நீங்கள் எந்த அளவிலும், எவ்வளவு விரைவிலும் மெய்ஞானத்தை அடைய முடியும் என்பதை நிர்ணயிக்கின்றன.

20.07.25

தனக்கு ஏற்பட்ட பிரட்சனைக்கு தானும் ஒரு காரணம் என்று ஏற்றுக்கொள்பவர்கள் என்றாவது ஒருநாள் அமைதியை அடைவார்கள். அதைவிடுத்து அடுத்தவர்களின் மீது குற்றம் சுமத்துபவர்கள் அமைதியடைந்ததாக சரித்திரம் இல்லை.

21.07.25

நீங்கள் செய்யும் நற்காரியங்களை நெருங்கிய உறவினர்களே ஆனாலும் அவர்களிடம் கூறாதீர்கள். ஏனெனில் உங்களுக்கு நற்காரியமாகத் தோன்றுபவை அவர்களுக்கு தவறாகத் தோன்றலாம்.

22.07.25

ஆணவம், பொறாமை இவை இரண்டும் இருக்கும் வரை, யாராலும் பிரகாசிக்க முடியாது. ஆணவம், பொறாமை நிரம்பிய ஒருவருக்கு ஆண்டவன் அதிர்ச்சி வைத்தியம் கொடுப்பான். எனவே தன்னலமற்ற அன்பை வளர்த்துக்கொள்ளுங்கள்.

23.07.25

ஏதாவது ஒன்றை பிரிவதற்காக வருத்தப்படாதீர்கள்! பிரிவு என்பது அனுபவமாகும். தினந்தோறும் பகலைப்பிரிகிறோம், இரவின் ஓய்விற்காக! இன்பத்தை பிரிகின்றோம், துன்பத்தை ஏற்கின்றோம். உறவுகளைப் பிரிகின்

றோம், நமக்காக வாழ்வதற்கு, பிரிவு துன்பமல்ல! அனுபவம். அனுபவமே வாழ்க்கை.

24.07.25

கடவுளின் கருணை நம் கர்மாவைவிட சக்தி வாய்ந்தது. கடந்த பிறவியின் கர்மாவிற்கு ஏற்பவும், வரும் பிறவியை செம்மை செய்து கொள்ளும் வாய்ப்பாகவே தற்போதைய பிறவி அமைகின்றது. அவரவர் செய்த நல்வினை, தீவினைகளுக்கேற்ப, அவரவர் வாழ்க்கை தீர்மானிக்கப்படுகின்றது.

25.07.25

ஒரு பக்தன் மிகவும் அடக்கமும், பணிவும் உள்ளவனாக இருந்தால், வாழ்வின் எத்தகைய சூழ்நிலையையும், இறைவனின் ஆசியாகவே ஏற்றுக்கொள்வான். தண்டனையும், சாபமும்கூட இறைவனின் கருணையே! இதற்காக அவன் யாரையும் குறை கூறுவதில்லை.

26.07.25

நீங்கள் இந்த உலகத்தில் என்ன வேலை வேண்டுமானாலும் செய்யலாம். நீங்கள் முக்கியமாக செய்ய வேண்டியது உங்களது மனதினை வேலை செய்ய விடாமல் பார்த்துக்கொள்வது. அதுவே "தவம்" எனப்படும்.

27.07.25

அழகும், மகிழ்ச்சியும் இவ்வுலகினில் நிரந்தரமானதல்ல! உறவும், நட்பும் விரைவில் கடந்துபோகும் மேகம் போன்றவை. எனவே எப்போதும் மகிழ்ச்சியின் அடையாளமாக இருக்கும் கடவுளிடம் சரணடைந்துவிடுங்கள்.

28.07.25

மிதமான உணவு, எளிய உடற்பயிற்சி ஆரோக்கியத்தை அளிக்கும். வாழ்வதற்காக சாப்பிடுங்கள் சாப்பிடுவதற்காக வாழாதீர்கள். பல வியாதிகளுக்கு மனதை இறை எண்ணங்களால் நிரப்புவதே சரியான மருந்து.

29.07.25

இதயத்தின் ஆழத்தில் இருந்து வரும் உண்மையான அழைப்பிற்காக இறைவன் காத்துக் கொண்டிருக்கின்றான். இக்கணமே இறைவனை நோக்கித் திரும்பி நேர்மையாக, உங்கள் வாழ்வின் உண்மையான நோக்கத்திற்காக வேண்டுங்கள்.

30.07.25

குருவின்மீது உங்களது நம்பிக்கையும், விசுவாசமும் எவ்வளவு ஆழமோ, அதற்கேற்றவாறே உங்களது ஆன்மீக முன்னேற்றம் அமையும்.

31.07.25

நீங்கள் கவனத்துடன் தேர்ந்தெடுத்த குருவை விடாமல் பற்றிக் கொள்ளுங்கள். சிலர் அதனை இழித்துப் பேசினாலும்கூட, வேறு குருவைப்பற்றி உயர்த்திப் பேசினாலும் கூட, நீங்கள் தேர்ந்தெடுத்த குருவை விடாமல் பற்றிக் கொள்ளுங்கள்.

●

உணர்ந்து பார்



நட்சத்திரம் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும், ஆனால் பகலிலே நட்சத்திரம் தெரியாது. சூரியன் இருக்கிறது என்பது எல்லோருக்கும் தெரியும், இரவிலே சூரியன் தோன்றாது.

இரவிலே இல்லாத சூரியனை பார்த்து சூரியன் என்பதே இல்லை என சொல்வது எவ்வளவு அவசர புத்தியோ, அவ்வளவு அவசர புத்திதான் தனக்கு தெரியாதது, இல்லை என வாதிப்பது. எல்லாருக்கும் எல்லாமும் தெரிகிற நிலைமையில் அமைந்தது அல்ல இந்த உலகம்.

உதாரணாமாக உங்களுடைய கண்களை நீங்களே பார்க்க வேண்டும் என விரும்பினால் பார்க்க முடியுமா, முடியாது !

ஓம்காரத்தின் மகிமை

எங்கும் நிறைந்திருக்கும் ஓம்காரத்தின் முழுமையான முக்கியத்துவத்தை புரிந்து கொள்ள வேண்டும் என்றால் நமது புலன்களை கட்டுக்குள் கொண்டுவர வேண்டும். அதற்கு சுயக்கட்டுப்பாடு என்பது மிகவும் அவசியம்.



எந்த மந்திரத்தை உச்சரித்தாலும், ஓம்காரத்திற்கு கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நமசிவாய நமஹ, கேசவாச நமஹ, கோவிந்தாய நமஹ, ஆகிய மந்திரங்களில் கடைசியில் நமஹ என்ற மந்திரத்தின் முக்கியத்துவத்தை கவனிக்க வேண்டும்.

ஒவ்வெரு

ஆகையால் எனக்கு கண்ணில்லை என்று பேச முடியுமா? கண்ணாடியில் பார்த்தால் கண்களின் பிம்பம் தெரியும்! அதைப்போல் விக்ரஹங்கள் கடவுளின் பிம்பமாக இருக்கிறது.

இதோ இங்கு ரோஜாப்பூ மாலை இருக்கிறது. இது என்ன பூ எனக்கேட்டால்


அதன் பெயரை சொல்லலாம். நிறத்தை கேட்டால் நிறத்தையும் சொல்லலாம் இது எந்த இடத்தில் கிடைக்கும் என்றும் சொல்லிவிடலாம். ஆனால் அதன் வாசம் எப்படியிருக்கும் எனக்கேட்டால் "முகர்ந்து" பார் என்றுதான் சொல்லமுடியும்! கடவுள் எப்படியிருப்பார் என்று கேட்டால். உணர்ந்து பார் என்றுதான் கூற முடியும்

மந்திரத்தின் தொடக்கத்திலும், ஓம் பயன்படுத்தப்படாவிட்டால் "நமஹ" அதாவது வணங்குகின்றேன் என்பதின் அர்த்தம் புரியாமல் போய் விடும்.

தொடக்கத்தில் ஓம் என்றும், முடிவில் நமஹ என்றும் கூறினால் தான் மந்திரத்தின் முழு பொருளும் வெளிப்படும்.

முதலில் இரண்டுக்கும் உள்ள தொடர்பை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். நமஹ என்பது பிரகிருதி அதாவது புறப்பொருட்களான உலகத்தை குறிக்கின்றது. ஓம் என்பது பரம் பொருளைக் குறிக்கன்றது.

உலகப்பொருட்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை வெளிப்படுத்துவதே மந்திரத்தின் நோக்கமாகும்.



இராஜயோகம்

வாழ்க்கையின் உச்சமான ஆனந்த நிலையை அடைவதற்கு நம் கர்ம கணக்குகளின் தாக்கத்தால் வரும் சவால்கள், துக்கமான தருணங்கள், மற்றும் போராட்டங்கள் ஆகியவற்றை தைரியத்துடன் எதிர் கோள்வது மிகவும் அவசியம் ஆகும்.

சுகமும், துக்கமும் இரண்டும் ஒரே விளையாட்டின் இரண்டு அங்கங்கள். சுகம் என்பது இறைவனின் நெருக்கத்தை அனுபவிக்கும் கொண்டாட்டம். துக்கம் என்பது நம்மை தூய்மையாக்கும். கர்மக்கணக்கை சமம் செய்யும் பாடம் என்பதை நாம் மறக்கக்கூடாது.

எனவே ஆத்மாவாகிய நாம் இந்த இரண்டையும் சமநிலையோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.கூடவே தன்னை ஒரு ஆத்மாவாக உணர்ந்து எப்போதும் பரமாத்மாவோடு இணைந்திருக்க வேண்டும். நம் வாழ்க்கையில் ஏற்படும் இன்ப துன்பங்கள் எதுவாயினும் சரி அதை (இல்லற இன்பம் உட்பட) இறைச் சிந்தனையோடு இணைந்து அனுபவித்தலே இராஜயோக தியானம் எனப்படும். இதன் மூலம் மட்டுமே நாம் உயர்ந்த நிலையை அடைய முடியும்.

தொடர் - 27

திருவருள் தேடி

குருவருளே திருவருளாம்! குரு உண்டேல் குறையில்லை! குருவே சகலம் சதா சர்வம் என சத்குருவின் திருவடி போற்றி வணங்கி நமது சாய் சொந்தங்கள் அனைவருக்கும் சிரம் தாழ்த்தி கரம் கூப்பி வணங்குகிறேன். நமது சாய் மகராஜ் குருவைத் தேடி 8 ஆம் ஆண்டில் நடைபோடத் தொடங்கும் நேரம், திருவருள் தேடியின் 27 ஆவது மாதமாக தொடர்கிறது. ஆசிரியர் மற்றும் வாசகர்களின் ஆதரவுக்கு நன்றி!

நமது ஆன்மீக ஆசானாக ப்ரத்யட்சப் பரப்ரம்ம சொரூபமாய் நாம் வாழும் காலத்திலேயே நம் கண்முன்பாகவே நடமாடி, நம்மை திருவருள் புரிந்து ஆட்கொண்ட பகவான் சத்ய சாய்பாபா அருட் பெரும் கருணையுடன் மற்ற குருதத்த அவதாரங்களைப் பற்றி




யும் உணர்ந்து அறிய வகை செய்து வழி நடத்துகிறார் என்பது நம் வாழ்வில் பூரணமான உண்மை.

அவருடைய வழிகாட்டுதல் மூலமே ஷீரடி சாய் அவதார மகிமை களையும் உணர்ந்து அனுபவித்து பாராயணம், ஷீரடி தரிசனம், நாம ஜெபம் என விறுவிறுப்புடன் நமது ஆன்மீக பயணம் களை கட்டுகிறது. பகவான் சத்ய சாய் பாபாவின் பொற்பாத கமலங்களுக்கு அவரது நூற்றாண்டு வைபவத்தையும் முன்னிட்டு நமது நமஸ்காரங்கள். ஓம் சாய்ராம்.

செப்டம்பர் மாதம் 27 ஆம் தேதியே ஷீரடி சாய் இப்பூவுலகில் அவதரித்த தினம் என சத்ய சாய் பகவான் அறிவித்திருப்பதால் இந்த இதழில் ஷீரடி சாய் சொந்தங்கள் அனைவருடனும் ஒரு மகிழ்ச்சியான சாய் பாபா பிறந்தநாள் வாழ்த்துக்களை பகிர்ந்து கொள்வதில் மிகப்பெரிய குதூகலம், நம் அனைவருக்குமே. ஷீரடி சாய் பிறந்த இடம் "பத்ரி" எனும் கிராமம் மஹாராஷ்டிரா மாநிலம், நாள் 27.9.1835. சத்ய சாய் பகவான் பிறந்த இடம் "பர்த்தி" ஆந்திரா மாநிலம், நாள் 23.11.1926. இந்த வருடம் அவரது நூற்றாண்டு வருடமாகக்

சுந்தர் சாய்
9789404451



கொண்டாடப்படுகிறது. வெவ் வேறு வடிவங்களில் தோன்றிய பொழுதும் தனது அடியார்களை ஆட்கொண்ட அபார பெரும் கருணை ஒன்றே.

சத்ய சாய் பகவான் நம் வாழ்வில் நுழைந்து மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கி ஒரு கால கட்டத்தில் ஷீரடி சாய் அவதாரத்தை நமக்கு அறிமுகப்படுத்தி அந்த ரூபத்திலும் தொடர்ந்து அளவில்லா பேரன் பால் நம்மை ஆண்டு வழி நடத்துவதுடன் மேன்மேலும் பரந்து விரிகின்ற மூல ரூபமான ஸ்ரீ குரு தத்த அவதாரங்களாய் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர், ஸ்ரீ குரு நரசிம்ம சரஸ்வதி, ஸ்ரீ ஸ்வாமி சமர்த்தர், சத்குரு மாணிக்க பிரபு என மற்ற அவதாரங்களைப் பற்றி அறிந்து கொள்ள ஆசிர்வதித்து அதற்கான ஆன்மீக அன்பர்களையும் நமக்கு அறிமுகம் செய்து வழி நடத்து கின்ற பிரத்யேக கருணையை வார்த்தைகளால் என்னால் முழுமையாக்க முடியவில்லை.

ஒரு தெய்வ மஹா சங்கல்பமாகவே ஷீரடி சாய் சத்சரித பாராயணம் மிக பிரமாண்டமான முறையில் உலகெங்கும் ஊக்குவிக்கப்பட்டது நம் அனைவருக்கும் தெரியும். இன்றளவும் எவ்வளவோ குழுக்கள் குறுகிய கால, அகண்ட பாராயணம், நித்ய பாராயணம், வியாழ கிழமைகளில் குரு வார பாராயணம், சப்தாகம், தசாக பாராயணம் என சாய் மகராஜ் சமாதியடைந்த நூற்றாண்டு விழா அனுசரிப்பாக மாபெரும் அக்னியாக பரவியது. நாமும் அந்த காலகட்டங்களில் ஒரு சிறு குழு 11 பேருடன் ஆரம்பித்து பாராயணம் செய்யத் தொடங்கினோம்.

நாளடைவில் அது 27 பேர், 53 பேர் என விரிவடைந்து "குருஸ்தான்" "துவாரகாமாயி" "சமாதி மந்திர்" என்ற பெயர்களுடன் விறுவிறுப்பாய் பாராயணங்கள் செய்யப்பட, சாய் பக்தர்களின் வாழ்விலும் அதிசயிக்கத் தக்க மாற்றங்கள் நடக்க ஆரம்பித்தன. அது நம்மை மேன்மேலும் குரு ரூபத்தின் சத்சரித பாராயணங்களை நோக்கி ஈர்த்தது. ஷீரடி பயணமும் மாதம் ஒருமுறை என்றளவில் சாயி ஆசிர்வாதத்துடன் தொடங்கி குறைந்தது 3 இரவுகள் தங்கி தரிசனம், பாராயணம், தின ஆரத்தி தரிசனம் என தீவிரமாக சாய் பக்தி பரிமளிக்கத் தொடங்கியது. இவையெல்லாமே எந்த ஒரு தெய்வீக திட்டம் முடிவு செய்தது என்பது பின்னாட்களில் தான் விளங்கியது.

ஆம், நீங்களும் நன்றாக யோசித்துப் பாருங்கள், உலகளவில் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்தன. எவரும் கனவிலும் எண்ணிப் பார்க்காத, வேறெங்கும் கேள்விப்படாத வகையில் உலகமே ஸ்தம்பித்துப் போனதை நாம் மறந்திருக்க வாய்ப்பில்லை. எவரும் வீட்டை விட்டு செல்ல முடியாதபடியான "முடக்கம்". கூண்டிலடைக்கப்பட்ட விலங்குகளாய் நாமனைவரும் வீதிகளில்கூட நடமாடமுடியாதபடி, மிக அத்தியாவசியமான அவசரத் தேவைகளுக்கு மட்டும் அரசாங்க அனுமதியிருந்தால் மட்டுமே வெளியில் செல்ல அனுமதிக்கப்பட்டோம்.

அந்த கால நெருக்கடியில் காலை இருந்தவர் மாலை இறந்தவராய் அறியப்பட்டு ஊரெங்கும் உயிர் பயம். கொரோனா.. கிரிக்கெட் ஸ்கோர் போன்ற அப்டேட்டுடன் பீதி கிளப்பிக் கொண்டிருந்த நேரத்தில் நம்மில் எத்தனை பேருக்கு இந்த பாராயணம், நாம ஜெபம் ஓர் மிகப்பெரிய பாதுகாப்பு வளையமாக இருந்து மனோ பலத்தை பெருக்கி மற்றவர்களுக்கும் ஆதரவான வார்த்தைகளை கூறி நிம்மதியளித்தது.

இந்த குழப்பமான சூழ்நிலை தொடங்க இருப்பது நமக்குத் தெரியாது போனாலும், முற்றும் அறிந்த பிரபஞ்ச சக்தியான நமது சத்குரு சாய்நாதர் பலரை கருவியாகத் தேர்ந்தெடுத்து ஆன்மீக நாட்டத்தை தூண்டி, வீட்டிலிருந்தபடியே (கோவில்களின் கதவுகளும் மூடப்பட்ட நிலையில்) இறை வழிபாட்டை செயல்படுத்தி



நம்மை பாதுகாத்த அற்புதம் தான் "மிகப்பெரிய மிராக்கிள்".

அதில் நமக்கும் ஒரு சிறு பங்களித்து பாராயணக் குழுக்கள் நடத்தியது. அதற்கு முன்னரே "ஓர் நாள் பாராயணமாக" சுமார் 15–20 அன்பர்கள் ஓரிடத்தில் கூடி அத்தியாயங்கள் பங்கிட்டுக் கொண்டு 2–3 அத்தியாய பாராயணம் மனதளவில் ஒரே நேரத்தில் சேர்ந்து படிக்க, ஒரு மணி நேரத்தில் சத்சரிதம் முழுமையாகப் பாராயணம் முடித்தோம். அத்துடன் விஷ்ணு ஸஹஸ்ர நாமம், லலிதா ஸஹஸ்ரநாமம், சாயி நாம ஜெபம், ஆரத்தி, அன்னதானம் என விமர்சையாக நடந்தது.

திடீரென அந்த காலங்களில் நமக்கு ஓர் ஐயம் (அகங்காரம் எனலாம்) துளிர் விட்டது. இதை நாமாக செய்கிறோமா அல்லது சத்குரு தான் இயக்குகிறாரா என சந்தேகத்துடன் ஷீரடி சென்ற பொழுது பாபாவிடமே கேட்டு விட முடிவு செய்தேன். சமாதி மந்திர் தரிசனம் முடிந்து சாய் சத்சரித

புத்தகம் வாங்க சமஸ்தானத்தின் புத்தகாலயாவிற்கு சென்று தமிழ் சாய் சத்சரிதத்தை தேட ஒன்று கூட கிடைக்கவில்லை. ஸ்டாக் இல்லை, பத்து பதினைந்து நாட்கள் ஆகும் என்று தெரிவித்து விட்டனர். ஏமாற்றத்துடன் பாபாவிடம் நாளை வியாழன் மற்றும் பௌர்ணமி நாளன்று என்னால் பாராயணம் செய்ய முடியாதே, என வருத்தத்துடன் சமாதி மந்திரில் சுற்றிக் கொண்டிருக்கும் பொழுது ஓர் அழைப்பு.

வட இந்தியாவிலிருந்து வந்திருக்கும் ஓர் சாய் பக்தை நம்மை அழைத்து "அன்னதானம்" செய்ய அலுவலகத்தில் பணம் கட்ட வேண்டும் உடன் வாருங்கள் என்றார். நமக்கு பரிச்சயம் உள்ள நீலேஷ் என்ற ஊழியர் கவுண்டரில் இருக்கவே அவரிடம் சென்று ரூ.25,000 பணம் செலுத்திய பின், மீண்டும் இன்னும் ஒரு 25,000/– கட்டிவிடலாம் என்றார். நீலேஷ் அதை என் பெயரில் செலுத்தினால் 2 முறை ஆரத்தி தரிசனம் மற்றும் 4 முறை இலவச தரிசனம் பார்க்கலாம் என்றவுடன் அவர் உடனே சம்மதித்து அதனாலென்ன? சுந்தர் சாய் பெயரிலேயே ரசீது கொடுக்கவும் என்றார். இவை முடிந்தவுடன் நீலேஷ் எங்களை அலுவலகத்தின் உள்ளே வருமாறு அழைத்து, நிறைய உதிப் பொட்டலம் மற்றும் பாபாவின் லட்டு பிரசாதம் தரப்போகிறார் என எண்ணி உள்ளே சென்றோம்.

அவர் எங்களை உயரதிகாரிக்கு அறிமுகம் செய்து ரசீதுகளை அவரிடம் கொடுக்க, அவர் எங்களுக்கு நாற்காலியில் அமர இடம் கொடுத்து, எங்களிடம் சிறிது நேரம் நட்புடன் உறையாடிவிட்டு, "சாய் சத்சரிதம்" எந்த மொழி புத்தகம் வேண்டும் என்றார் தாமாக. அந்த பக்தை தன்னிடம் ஆங்கிலத்தில் ஏற்கனவே இருக்கிறது என்று சொல்லி 2 புத்தகமும் எனக்குத் தேவையான மொழி யிலேயே பிரசாதமாக வாங்கிக் கொள்ளச் சொன்னார். என்ன ஓர் அற்புதமான பாபாவின் லீலை! உடனே ஒன்றுக்கு இரண்டாக தமிழ் சத்சரிதம் கொடுத்து எங்களுக்கு சால்வை போர்த்தி, வீரடி சாய் வெள்ளிக்காசு, பாபா வஸ்த்திரம், உதி பிரசாதம் அளித்து புகைப்படம் எடுத்து மரியாதை செய்து அசத்தினார்.

பாபாவிடம் கேட்ட கேள்விக்கு திகைப்பான உறுதியான பதிலை உடனே அளித்து நமக்கு மரியாதை செய்து வெள்ளிக் காசு, சால்வை பிரசாதங்களுடன் ஒன்றுக்கு இரண்டாக இதோ தமிழில் சாய் சத்சரிதம் பிரசாதமாகவே வழங்கப்பட்டு விட்டது. இதை விட முத்திரை பதித்த பதிலை பிரமாணமாக பெற இயலுமா? என்னே ஓர் அபார கருணை. எல்லாம் சாயி – எண்ணம் செயல் அனைத்தும் முழுமையாக என உறைக்க உரைத்த சத்குருவை தவிர வேறென்ன வேண்டும் இப்பிறவியில்? போனஸ் ஆக பின்னாட்களில் யோகி ஸ்ரீராம் பாபாவின் திருக்கரங்களால் "பாராயணப் பகலவன்" என்கிற பட்டம் வேறு. அஷ்டாங்க நமஸ்காரத்தைத் தவிர இந்த எளியவனால் கண்ணீரையே

பன்னீராய் சத்குருவின் திருவடிகளில் சமர்ப்பிக்க மட்டுமே முடிகிறது. சாய் நாதா... என் வாழ்க்கை உன்னோடுதான் பாபா.

இதே போன்று இன்னும் சில சம்பவங்களில் ஷீரடியில் மட்டுமன்று, பாபாவை எண்ணி செல்லும் இடங்களிலெல்லாம் நிகழ்வதைப் பற்றி வரும் இதழ்களில் விவரிக்கிறேன். இந்த ஏக தின பாராயணம் எனும் ஒரு நாள் பாராயணம் – பெங்களூர், கோவை, திருப்பூர், சென்னை மற்றும் இலங்கை கொழும்பு விலும் பாபாவின் அருளால் நடந்தேறியது. அதே போல சாய் நாம ஜெபம் ஒரு கோடி செய்ய ஓர் குழு அமைத்து இன்றளவும் ஒரு கோடியைத் தாண்டி "ஓம் ஸ்ரீ சாய்நாதாய நம:" என்ற நாம ஜெபம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. இலங்கையிலும் சாய்நாதன் சரணாலயம் எனும் பாபா கோவில் நிகழ்வுகளிலும் நாம் பங்கேற்க அன்போடு இலங்கை சகோதர சகோதரிகள் ஆதரவும் இன்றளவும் நமக்கு கிடைத்து கொண்டிருப்பதும் பாபாவின் பெரும் கருணையே.

பாபாவின் பேரருளால் ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் சத்சரித பாராயணமும், குரு சரித்திர பாராயணம் மற்றும் அக்கல்கோட் மகராஜ், ஸ்ரீ சுவாமி சமர்த்தர் பாராயணம், கஜானன் மகராஜ் சத்சரித பாராயணமும் மிக உற்சாகமாக செய்து இறைப் பணியில் நம்மை ஆழ்த்திய சத்குரு இரண்டு இடங்களில் காஞ்சிபுரம் அருகே அமைந்திருக்கும் ஸ்ரீ சக்ர தத்த ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப ஸ்ரீ சாய் பீடத்தின் மேல் சிருணை எனும்



இடத்தில் அமைந்துள்ள கோவில் மற்றும் 'மருதம்' எனப்படும் மாருதி புரம் ஸ்ரீ சுவாமி சமர்த்தர் சேவா சமஸ்தான் டிரஸ்ட் அமைந்திருக்கும் ஸ்ரீ குரு தத்த பாதுகா க்ஷேத்திர ராஜிதம் எனும் கோவிலிலும் பூமி பூஜை முதல் கும்பாபிஷேகம், வருஷாபிஷேகம் என எல்லா சிறப்பு பூஜை நாட்களிலும் நமது சிறு பங்களிப்பாகவும், டிரஸ்ட்டின் உறுப்பினராகவும் பணி செய்ய ஆசிர்வதித்து இருப்பதும் பெரும்பாக்கியமே.

அவற்றின் உருவாக்கங்களில் கிடைத்த அனுபவங்களையும் வரும் இதழ்களில் பகிரலாம். சத்குரு பாதம் பணிந்து மீண்டும் ஒருமுறை குருவே அனைத்தும், எல்லா இடங்களிலும் நேரங்களிலும் எல்லோருக்குமாய் அருள் செய்து வழி நடத்துவதற்கு தாள் பணிந்து வணங்குகிறேன்...

மீண்டும் தொடர்வோம்.




சலசலக்கும் ஆற்றில்
சருகாய் ஒரு பயணம்!
பாதையெல்லாம் முட்கள் -
தைத்தபோதெல்லாம்
தைலத்தோடு ஓடி வந்த
குருமார்கள்!
பாதாளத்தில் விழுந்தால் கூட
எழுந்து நிற்கும்
ஆன்மீக ஆசிகள்!
முருகன் அருணகிரிக்கு
சொன்னதை ஸ்ரீராமிடம்
சாய்ராம் சொன்னார்
'சும்மாயிரு!'.
அனுமன் போல்
நெஞ்சைப் பிளந்ததொரு
அனுபவம்
குருவைத் தேடி!




நீங்கள் வாழ்வில் வந்தது
நாங்களும்
பாக்கியவான்கள்
என்று பறை சாற்றவே!
நன்றிகள் குருவே!

திரு. அருணாச்சலம் வைத்யநாதன்
அச்சமுண்டு அச்சமுண்டு, நிபுணன்,
பெருச்சாழி, கல்யாண சமையல் சாதம்,
சா பூ திரி, திரைப்பட இயக்குனர்.



தமிழ் புத்தகம்
விலை 400/-
(தபால் செலவு உட்பட)

யோகி ஸ்ரீராம் பாபா
அவர்கள் எழுதிய அற்புதமான
ஆன்மீக அனுபவத் தேடல்கள் நிறைந்த
"குருவைத்தேடி"
நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும்
விற்பனையில் உள்ளது.
"குருவைத்தேடி" புத்தகம்
வாங்குவோறுக்குசகல
தோஷங்களையும் போக்கும்
ரூ.1000 மதிப்புள்ள
"சாயி தாயத்து"
இலவசமாக
அனுப்பிவைக்கப்படும்.



ஆங்கில புத்தகம்
விலை 250/-
(தபால் செலவு உட்பட)

G- PAY NO: 9941816692

SAI DHYANALAYA

8 ஆண்டு துவக்க





விழா...!

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழின் 8 ஆம் ஆண்டு துவக்க விழா சென்ற 10.08.25 ஞாயிறு அன்று சென்னை டி.நகர் ஸ்ரீ கிருஷ்ணசுவாமி கல்யாண மண்டபத்தில் காலை 9.00 மணிக்கு கோலாகலமாகத் தொடங்கியது. விழாவினை திருமதி. மாதங்கி பாலாஜி, மற்றும் திரு. நாராயணன் ஆகியோர் தொகுத்து வழங்கினர்.







திருமதி. ஜெயந்தி ஸ்ரீராம்



முதல் நிகழ்ச்சியாக,செல்வி. அமிர்தா, திருமதி. ஜெயலட்சுமி குழுவினரின், இறைவணக்கம், ஆத்மஞான பாடல், சாய் பஜன் நடந்தது. அதனைத்தொடர்ந்து குரோம்பேட்டை தில்லை நாட்டியாலயா குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நாட்டிய மாணவிகள் அனைவருக்கும் நமது ஆசிரியர்



அவர்கள் "நாட்டியத் தாரகை" என்ற விருதினை அளித்து மரியாதை செய்தார்.

அடுத்தாக, விழாவை தலைமை தாங்க வாழும் பாபா திரு. அச்சுதானந்தா சுவாமிகள் மேடைக்கு அழைக்கப்பட்டார். அதனைத்தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்கள், திரு. ஏ.பி. மகாபாரதி ஐ.ஏ.எஸ் (ஓய்வு), திரு. எஸ். இராமநாராயணன், இயக்குனர். (கிரி டிரேட்டிங் ஏஜென்ஸி) திருமதி. மாலினி கணேஷ். (வழக்கறிஞர்) ஆகியோர் மேடைக்கு அழைக்கப்பட்டு ஆசிரியரால் கவுரவிக்கப்பட்டார்கள்.

முதல் நிகழ்ச்சியாக நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழின் 85 இதழ் வெளியிடப்பட்டது. இம்மாத இதழை திருமதி. மாலினி கணேஷ் அவர்கள் வெளியிட ஸ்ரீ வல்லபானந்தமயி அம்மா அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து ஸ்ரீ அச்சுதானந்த சுவாமிகள், திரு. ஏ.பி. மகாபாரதி, திரு. எஸ். இராம நாராயணன், திருமதி. மாலினி கணேஷ், ஆகியோர் ஆசிரியர் திரு.யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் எழுதிய

"மொளனத்தின் மூலம் தவம்" புத்தகத்தைப் பற்றி சிறப்புரையாற்றினார்கள். திரு. ஏ.பி. மகாபாரதி அவர்கள் புத்த கத்தை வெளியிட, திரு. எஸ். இராமநாராயணன், அவர்கள் புத்தகத்தை பெற்றுக் கொண்டு சிறப்பித்தனர்.

பின்னர், சிறப்பு விருந்தினர் களுக்கு அவர்கள் மனித குலத் திற்கு ஆற்றிய சேவையினை பாராட்டி, திரு.கி.றி. மகாபாரதி IAS அவர்களுக்கு, "கர்ம யோகி" என்ற விருதும், திரு. S. இராமநாராயணன்.



அவர்களுக்கு, "ஆன்மீக முரசு" என்ற விருதும், திருமதி. மாலினி கணேஷ். அவர்களுக்கு, "மங்கையர்கரசி" என்ற விருதும், பரத நாட்டிய குரு திருமதி. விமலா கேசவன் அவர்களுக்கு, "நாட்டியச் சுடரொளி" என்ற விருதும் வழங்கி கவுரவிக்கப் பட்டார்கள்.

மேலும், பகவான் சாயிநாதரின் புகழ் பரப்பும் சேவையினை, மனமகிழ்ந்து வாழ்த்தி, திரு. S.நாராயணன் அவர்களுக்கு, "ஆத்மஞானி" என்ற விருதும், திருமதி.சுமதி ராமமூர்த்தி அவர்களுக்கு "அன்னபூரணி"என்ற விருதும், திரு.ஸி.குமார் குருக்கள் அவர்களுக்கு,"சேவா ரத்தினம்" என்ற விருதும், திரு.ரமேஷ். அவர்களுக்கு

"அன்னதானப் பிரபு" என்ற விருதும் வழங்கி கவுரவிக்கப் பட்டது.

8 ஆண்டு துவக்க விழா மிகச்சிறப்பாகவும் பிரம்மாண்ட மாகவும் நடைபெற பொருள் ரீதியாகவும் மற்றும் அனைத்து விதத்திலும், உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் விழா நிர்வாகி திரு. பாலாஜி அவர்கள் நன்றி கூற விழா இனிதே நிறை வடைந்தது.

விழாவிற்கு வந்திருந்த பக்தர் கள் அனைவருக்கும் அறுசுவை விருந்தளிக்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை சாய் தியானாலயா ஆத்மஞானபீடத்தின்ஒருங்கிணைப் பாளர் திரு. பாலாஜி அவர்களின் தலைமையில், ஆத்மஞானியர் அனைவரும் மிகச்சிறப்பாக செயல்பட்டு விழாவினை நிகழ்த்தி நிறைவு செய்தார்கள் அனைவருக்கும் எங்களது இதழின் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள் கின்றோம்.

●

சித்தர்களின் சீவ சமாதி தரிசனம்


அன்பிற்கினிய சாய் சொந்தங்களே! இதுவரை நீங்கள் சித்தர்களின் சீவசமாதி தரிசனம் என்ற தலைப்பில் கடந்த 85 மாதங்களாக திரு. வெங்கடேசன் அவர்கள் எழுதிவந்த சென்னை, அதன் சுற்றுவட்டாரத்தைச் சேர்ந்த சித்தர்களின் சீவசமாதிகளை தரிசித்துவந்தீர்கள். அத்தொடர் சென்ற மாதத்துடன் நிறைவு பெற்றது.

இனி இம்மாதம் முதல் நமது ஆசிரியர் யோகி ஸ்ரீராம் பாபா அவர்கள் சென்னை தவிர தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் சீவபீடம் கொண்டுள்ள சித்தர்களின் சீவபீடங்களை தரிசித்து உங்கள்முன் "சித்தர் தரிசனம்" என்ற தலைப்பில் மாதந்தோறும் வழங்க உள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றோம்.

சித்தர்கள் தரிசனத்தில் இம்மாதம் நாம் காணப்போவது அழகர்மலையில் சீவசமாதி கொண்டிருக்கும் ஸ்ரீ இராமத்தேவர் சித்தரின் தரிசனம்.

ஸ்ரீ இராமத்தேவர் சித்தர்

இவர் நாகப்பட்டினத்தைத் தாம் வாழ்விடமாகக் கொண்ட சித்தர். இயல்பாகவே இவர் சஞ்சார சமாதியில் லயித்திடுவார். அதாவது இவர் நடந்து கொண்டே இருக்கும் போது இவரது எண்ணம் மட்டும் இறைநிலையோடு இணைந்திருக்கும். எதனையும் இவரது கண்கள் நோக்கிடாது, காதும் கேட்காது, சுவாசமும் ஓடாது.



இத்தகைய நிலையில் இராமதேவருக்கு காசி விசுவநாதரை நாகப்பட்டினத்தில் கொண்டுவந்து பிரதிஷ்டை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது. உடனே எழுந்து இராமதேவர் விரைந்து நடக்கலானார். எத்தனை நாட்கள்



அவர் நடந்திருப்பார் என்று அவருக்கே தெரியாது. சுயநினைவு இல்லாமலேயே அவர் நடந்தபடி சென்று கொண்டிருந்தார்.

ஒரு நாள் சுயநினைவு வரப் பெற்றார். அப்போது தாம் காசியில் இருப்பதை உணர்ந்து கொண்ட இராமதேவர் காசி விஸ்வநாதரை தரிசித்து மகிழ்ந்தார். பின்னர் கங்கையில் மூழ்கி எழுந்தபோது அவருடைய கரத்தில் லிங்கத் திருவுரு ஒன்று இருந்தது. அதைக் கண்டதும் இராமதேவர் மிகவும் மகிழ்ந்தார். மீண்டும் நாகப் பட்டினத்துக்கு வந்து காசி விஸ்வநாதப் பொருமானை பிரதி ஷ்டை செய்து பூஜித்து வந்ததுடன் தியானத்திலும் மூழ்கினார்.

அந்தக் காலத்தில் நாகைத் துறை முகத்திற்கு உலகெங்கிலும் இருந்து கப்பல்கள் வந்து சென்றிடும். பெரும்பாலும் அரேபிய நாடுகளி லிருந்து வரும் கப்பல்களே அதிகம். அக்கப்பல்களில் வரும் அரேபியர்களைக் கண்டு இராம இராமதேவர் அவர்களுடன் பேசிப் பழக ஆரம்பித்தார். ஒரு நாள் வழக்கம் போல் அவர் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் கண் விழித்துப் பார்த்தபோது தாம் அரேபியாவில் இருக்கும் மெக்காவுக்கு வந்து சேர்ந்து விட்டார். கடல் வழியில் வந்தாரா? அல்லது தரை வழியில் வந்தாரா? என அவருக்குத் தெரியாது.

வறண்ட பாலைவனம். கண்ணுக்கு எட்டிய வரை எங்கு பார்த்தாலும் மணல் பரப்பு. இராம தேவரைக் கண்ட அரேபியர்கள் தங்களது நாட்டிற்குள் எவனோ அந்நியன் அத்துமீறி நுழைந் துள்ளான் என்று எண்ணி

விரைந்து வந்து அவரைச் சூழ்ந்து கொண்டனர்.

"யார் நீ?" "எங்கிருந்து நீ வருகிறாய்?"

"எப்படி இங்கு வந்தாய்?" என்று அவரிடம் சரமாரியாகக் கேள்வி களைக் கேட்டு ஆக்ரோஷத்துடன் அவரைக் கொல்ல நெருங்கினர். அவர்களில் ஒரு புத்திசாலி இருந்தான். அவனால் இராமதேவர் உயிர் பிழைத்தார் என்று போகர் 7000 என்ற நூலில் பாடுகின்றார்.

"யூகியாம் மதிமந்திரி யோகவானாம்
உத்தமனார் அங்கொருவர் தான் இருந்தார்
யோகியாம் சின்மயத்தில் சேர்ந்த சித்து
ஒளிவான ரிஷி ஒருவர் அங்கிருந்தார்"

மேலும் அரேபியர்கள் அவரிடம், "நீ ஏன் தீன் தேசத்துக்கு வந்தாய்? உன்னைத் தண்டிக்காமல் விடமாட்டோம்" என்று கூக்குர லிட்டனர். இதுபற்றி.

"போனாரோ மலைநாடு குகை கடந்து
பொங்கமுடன் நபிதனையே காணவென்ரு
காணாறு பாதைவழி செல்லும் போது
கருங்காளை நபிக்கூட்டம் மிகவாய்க் கண்டு
மானான மகதேவர் பதியிலப்பா
மார்க்கமுடன் வந்ததனால் உநதமக்கு
தீனான தீன்பதியில் உந்தனைத் தான்
திட்டமுடன் சபித்திடுவோம் என்றிட்டாரே".

என்று போகர் 7000 ல், 5800 ஆவது பாடலில் கூறப்பட்டுள்ளது மேலும்,

"இராமதேவர் தாள் பணிந்து
எழிலான வார்த்தையது கூறும்போது
சென்றதுமே யாகோபு என்று கூறி
சிறப்புடனே சுன்னத்து செய்துமல்லோ
தின்றிடவே ரொட்டியது தானும் ஈந்து
சிறப்புடனே அசன் உசேன் என்று கூறி
வென்றிடவே உபதேச பிரணவத்தை
விருப்பமுடன் மலுங்குமார் ஓதினாரே.
- 5801

ஓதவே நபிநாயகர் கூட்டத்தாரகள்
உத்தமர்கள் மனம்போலே மனதுவந்து
நீதமுடன் மக்கபுரி கோட்டைக் குள்ளே
நிஷ்களங்க பக்கிரி யாகோபு தன்னை
கோதமுடன் கொண்டு சென்றார்
அரண்மனைக்குள்
கேறாமல் கொத்துபா ஓதினார்கள்
வீதமது பயனறிந்த சித்து தாமும்
விடுபட்டு வந்ததொரு யாகோபாச்சே
- 5802

என்று போகர் 7000 – இல் கூறுப் பட்டுள்ளது. அதாவது "உன்னைத் தண்டிக்காது விடமாட்டோம்" என்ற அரேபியரிடம் இராமதேவர் மிகவும் நயமான வார்த்தைகளால் வேண்டிக் கொண்டார். உடனே அவர்கள் இராமதேவரிடம், "அப்படி யானால் நீ எங்களின் மதத்தில் சேர்ந்துவிடு" என உரைத்து, "இன்று முதற்கொண்டு உனது பெயர் யாகோபு" என்று பெயர் சூட்டி அந்நாட்டு வழக்கப்படி அவருக்குச் சுன்னத்தும் செய்து வைத்தனர்.

பின்னர் அவரை அரேபியர்கள் மக்கா நகரத்துக் அரண்மனைக்கு அழைத்துச் சென்றனர். தங்கள் மறை நூலாகிய குரானை ஓதுவித் தார்கள். யாகோபுவும் அனைத் தையும் விரைவிலேயே கற்றுத் தேர்ந்து அவர்களது நம்பிக்கைக்கு உரியவரானார்.

வெகு விரைவிலேயே மெக்கா நகர மக்கள் யாகோபுவைத் தம்முள் ஒருவராக ஏற்றுக கொண்டனர். அவரும் அரேபி மொழியில் பேசிப் பழகினார். அவர்களது நோய்களையும் போக்கியருளினார்.



அவர்களுக்குள் உண்டான வழக்குகளைச் சிக்கல் ஏதுமின்றித் தீர்த்து வைத்தார்.

காலப்போக்கில் யாகோபுக்கு சீடர்கள் பலர் சேர்ந்தனர். தன் சீடர்கள் மூலமாய் அரபு நாட்டிலிருந்து அரிய மூலிகைகளைக் கொண்டுவரச் செய்த யாகோபு அவற்றின் தன்மைகளை ஆராய்ந்தறிந்தார். கற்ப மூலிகைகளின் திறனை சோதித்தறிய தாம் சாமதியில் இருக்க விரும்பினார் யாகோபு

சமாதிக்குள் இறங்கிய யாகோபு தன் சீடனிடம், "பத்தாண்டு காலத்துக்கு நான் சமாதியில் இருப்பேன். பின் வெளியே வருவேன். அவ்வாறு நான் சமாதியில் இருந்து வெளிவரும் போது அற்புதங்கள் பல நிகழ்ந் திடும். பின் தேன்மாரி பொழியும். நறுமண மலர்கள் பூத்துக் குலுங்கி வாசனையப் பரப்பும். விலங்குகளும் ஞானம் பேசும். இம்மாதிரியான அடையாளங்களைக் கொண்டு நான் சமாதியில் இருந்து வெளிவரும் நாளை நீ உணர்ந்திடலாம்" என்று கூறிய துடன் அச்சமாதியை மூடிவிடு மாறும் கூறினார்.

ஆண்டுகள் பத்தும் கழிந்தன. யாகோபு உரைத்தது போன்றே அவர் சமாதியிலிருந்து மீண்டு வந்தார். தனது சீடன் சமாதி அருகிலேயே தனக்காகக் காத்திருந்தது கண்டு மனம் மகிழ்ந்தார். அவனுக்கு உபதேசங்கள் பலவற்றை உரைத்து, தான் சமாதிக்குள் சென்ற பின் நடந்தது என்ன என்று தனது சீடனிடம் கேட்டார்.

சீடன் யாகோபுவிடம், "பல பேர் பலவிதமாகக் கூச்சலிட்டுப் பேசினர். நான் எதனையும் காதில் கேட்டுக் கொள்ளாதிருந்தேன். தங்களது சமாதிக்கு அருகிலேயே படுத்து உறங்கினேன். இரவும் பகலும் சமாதிக்குக் காவலாய் இருந்தேன் என்றான்.

சீடன் உரைத்து கேட்ட யாகோபு, "சீடனே! அவர்கள் பேசியதில் தவறு ஏதுமில்லை. இந்த மானிட தேகம் நிலையற்றது. காயகற்பம் உண்டு காயத்தைச் சித்தி செய்து நான்கு யுகங்கள் வாழ்ந்தாலும், பின் ஒரு நாள் இவ்வுடல் மண்ணோடு மண்ணாய்த் தான் போகும். நான் மீண்டும் சமாதியில் இருக்க விரும்புகிறேன்.

இம்முறை முப்பது வருடங்கள் கழிந்த பின்னரே நான் வருவன், நான் சமாதிக்குச் சென்ற பின் என்னைப் பற்றித் தவறாகப் பேசியோருக்குக் கண் பார்வை பறிபோய்விடும்!" என வுரைத்துவிட்டு மீண்டும் சமாதிக்குள் இறங்கிவிட்டார்.

இம்முறை சமாதியின் மீது பாறாங்கல் கொண்டு மூடப் பட்டது.

யாகோபு உரைத்தபடி சமாதி யின் அருகேயே முப்பது ஆண்டுகள் சீடர்கள் காத்திருந்தனர். பின் சமாதியிலிருந்து யாகோபு வெளிவந்த்தும் அவரது தரிசனம் பெற்றனர். ஜோதி வடிவாய் வெளிவந்த யாகோபு தம் சீடர்களது குறைகளைப் போக்கியருளினார். பின்னர் ஜீவன்முக்தி அடைய தான் தமிழகத்திற்குத் திரும்பிச் சென்றிட எண்ணினார். சிறிது காலம் தம் சீடர்களுடன் தங்கிய யாகோபு அவர்களுக்கு வேண்டிய உபதேசங்களைச் செய்தருளினார். பின் அவர் தன் சீடர்களிடம், "நான் மீண்டும் சமாதிக்குச் செல்கிறேன். இனி நான் திரும்பமாட்டேன்" என்றுரைத்தருளினார்.

யாகோபு உரைத்ததைக் கேட்டு அவரது சீடர்கள் திடுக்கிட்டனர். அவரைப் பணிந்து தொழுது, 'அவர் மீண்டும் சமாதிக்குச் செல்லக் கூடாது. தங்களுடனே இருக்க வேண்டும்.' என்று மன்றாடினர். ஆனால் அவர்களிடம் யாகோபு, "அட மூடர்களே! அவ்வாறே நான் இருந்தாலும் நான் இருக்கும் காலம் வரையில் என்னுடனேயே நீங்களும் இருக்க இயலுமா? பிறந்தவர்கள் அனைவரும் இறந்தே தீர வேண்டும். இந்த உடம்புதான் அழியுமே தவிர ஆன்மா ஒருபோதும் அழியாது. எனவே நீங்கள் வருந்த வேண்டாம். நான் என்றும் உங்களுடனேயே இருப்பதாக எண்ணுங்கள்" என்று கூறிவிட்டு விடைபெற்று மீண்டும் சமாதிக்குள் புகுந்தார்.



யாகோபு மெக்காவில் சமாதி கொண்டதாக சிலர் கூறுவர். ஆனால் அவர் சமாதியுள் இருந்து வெளிப்பட்டுத் தமிழகம் வந்தவுடன் சதுரகிரியில் சிறிது காலம் தங்கி யிருந்தார். தாம் மெக்காவில் இருந்தபோது அரபி மொழியில் எழுதிய மருத்துவ நூல்களைத் தமிழில் இயற்றினார். பின் சதுரகிரி வனத்தில் சிலகாலம் தங்கிய யாகோபு என்ற இராமதேவர் பின் அழகர் மலைக்கு வந்து அங்கேயே சமாதி அடைந்தருளினார்.

முருகனின் ஆறாவது படை வீடான பழமுதிர்ச்சோலையின் சற்று மேலே உள்ள ராக்காயி தீர்த்தத்தில் இருந்து மலைக்கு மேலே இரண்டு கிலோ மீட்டர் ஒற்றைய டிப்பாதை வழியாகச்சென்றால் ராமத்தேவரின் சீவசமாதியை அடையலாம். ●

புத்தக வளர்ச்சி நன்கொடை

நமது சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழ் கடந்த 85 மாதங்களாக பக்தர்களிடம் இருந்து எந்தவித எதிர்பார்ப்புமின்றி பரந்த மனம் படைத்த நல்லோர்களின் உதவியால் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்றது. இந்த இதழில் மூலம் பயன் பெற்றோர் ஏராளம். நம் இதழ் இன்னும் ஏராளமான நபர்களுக்குச் சென்று எல்லோரும் பயன்பெற வேண்டும் என்று கருதுகின்றோம். இந்த இதழில்வெளிவரும்செய்திகள்உங்களுக்குப்பிடித்திருந்தால், இந்த செய்திகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் தங்களால் இயன்ற காணிக்கையை புத்தக வளர்ச்சிக்கு அளித்து எங்களுக்கு ஊக்கமும், உற்சாகமும் அளிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொன்கின்றோம்.

இம்மாதம் புத்தக வளர்ச்சி நன்கொடை அளித்தவர்கள்:

திரு. சிவராமன், திருவாரூர். ரூ.501.
திருமதி. சாய்கிருபா, வாடிப்பட்டி. ரூ.500
திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார், பெரவள்ளூர். ரூ.200.
திருமதி.கமலா, தஞ்சை, ரூ.200
திரு. முருகானந்தம், குடந்தை. ரூ.200.
திரு.வேணுகோபால், நங்கநல்லூர். ரூ.100.
திரு. ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்,நங்கநல்லூர்.ரூ.100.
திரு. கோபால்சாய், விருகம்பாக்கம். ரூ.100.
திரு. ஞானவேல், அயனாவரம். ரூ.100.
திருமதி.பானுமதி. தாம்பரம். ரூ.100.

ஸ்ரீ சாயி சத்சரித்திரம் காட்டும் பாதைகள்



மனிதப் பிறவியின் நோக்கம் ஞானம் பெறுவதைத் தவிர வேறெதுவும் இல்லை. ஞானத்தை பெற்ற ஒருவர் இறைவன் நிலையை எய்துவார்கள். அதுவே முக்தி நிலை எனப் படும். ஞானத்தை அடைய வேண்டும் என்றால் நம்மை வழிநடத்த குரு வேண்டும். அதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என கூறப்படுகிறது.



குருதான் தெய்வத்தை காட்டவும் என்பதால் குருவுக்கு பின்னர் தெய்வம் வருகிறது.

குரு தன் சிஷ்யர்களுக்கு போதனைகள் மூலமாகவும், தன் வாழ்க்கை முறை மூலமாகவும் ஞானத்தை போதிக்கிறார். அவர்கள் ஸ்தூல ரூபத்தில் நம்முடன் வாழும் போது அவர்களின் வாழ்க்கை முறையை நாம் பார்த்து கிரகித்துக் கொள்ளலாம். அதுவே அவர்கள் நம்மை சூக்ஷ்மமாக வழி

திருமதி. மாதங்கி பாலாஜி

நடத்தும் போது அவர்களை நாம் அவர்களின் சரித்திர புத்தகங்கள் மூலம் மட்டுமே அறிய முடியும். மேலும் சரித்திர புத்தகங்கள் மூலம் ஞானத்தை வழங்கி வருகிறார்கள்.

ஸ்ரீ சாய் சத்சரித்திரம் சாயி நாதரின் சரித்திரம் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அந்த புத்தகத்தை நாம் அனைவரும் பல முறை பாராயணம் செய்திருப்போம். முக்கியமாக ஏதாவது ஒரு பிரார்த்தனையோடு பாராயணம் செய்திருப்போம். அவ்வழியாக சாயி நமக்கு போதனைகள் அளித்து உய்விக்கின்றார்.


இந்து தத்துவத்தின் அடிப்படை நூலான பகவத் கீதை,ஆன்மீக விடுதலைக்கான பாதையாக யோகத்தைப் பற்றி விரிவாக விவாதிக்கிறது. இது முக்கியமாக மூன்று யோகங்கள் முன்வைக்கிறது. அவை,

1. கர்மயோகம்: இது நாம் தினமும் செய்யும் செயல்கள் பற்றியது. செயல்களின் விளைவுகளில் பற்றுதல் இல்லாமல், கடமை மற்றும் சேவையில் கவனம் செலுத்துவதன் மூலம் முக்தி அடைவதற்கான வழிகளை போதிக்கிறது.

2. பக்தி யோகம்: இந்தப் பாதை தெய்வீகத்திற்கு பக்தி மற்றும் அன்பை மையமாகக் கொண்டுள்ளது. பெரும்பாலும் வழிபாடு மற்றும் சரணடைதல் மூலம் முக்தி அடைவதற்கான வழிகளை போதிக்கிறது.

3. ஞான யோகம்: இந்தப் பாதை சுய விசாரணை மற்றும் யதார்த்தத்தின் உண்மையான தன்மையை புரிந்து கொள்வதன் மூலம் அறிவையும் ஞானத்தையும் பெற்று முக்தி அடைவதற்கான வழிகளை போதிக்கிறது.

இதில் ஸ்ரீ சாய் சத்சரித்திரம் எந்த வழி மூலம் முக்திக்கான பாதையை போதிக்கின்றன என்பதை விளக்கும் நோக்கத்தில், குரு பூர்ணிமாவை முன்னிட்டு கடந்த ஜூலை 19ஆம்



தேதி சென்னை மயிலாப்பூரில் அமைந்துள்ள பாரதிய வித்யா பவனில், 'ஸ்ரீ சீரடி சாயி சத்சரிதம் காட்டும் பாதை கர்மயோகமா ? பக்தியோகமா ? ஞான யோகமா?' என்கிற தலைப்பில் மூன்று பேச்சாளர்கள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். இந்த நிகழ்ச்சியை "பாராயண பகலவன்" திரு. சுந்தர் சாய் அவர்களும், சாய் பக்தை திருமதி. கீதப்ரியா மற்றும் அவர்களுடைய குழுவினர்களும் ஏற்பாடு செய்திருந்தனர். ஏராளமான சாயி பக்தர்கள் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

கர்மயோகம் என்கிற தலைப்பில், வழக்கறிஞர் திருமதி. மாலினி கணேஷ் அவர்களும், பக்தியோகம் என்கிற தலைப்பில், ஆன்மீக பேச்சாளர் திருமதி. Dr. சுதா சேஷய்யன் அவர்களும், ஞான யோகம் என்கிற தலைப்பில் குரு திரு. யோகி ஸ்ரீராம் பாபா அவர்களும் பேசினார்கள்.

நிகழ்ச்சி சரியாக மாலை ஐந்து மணிக்கு இறைவாழ்த்து, பஜனை, நடனம் என்று சம்பிரதாயமாக தொடங்கியது. திரு. சுந்தர் சாய் அவர்களின் வர்ணனையில் நிகழ்ச்சி தொகுத்து வழங்கப்பட்டது.



முதலாவதாக, ஸ்ரீ சாய் சத்சரித்திரம் கர்ம யோகத்தை தான் போதிக்கிறது என்று பேசுவதற்கு 'திருமதி. மாலினி கணேஷ்' அழைக்கப்பட்டார். அவர் இதுதான் சாயிபாபா பற்றி தான் பேசும் முதல் மேடை என்று குறிப்பிட்டார். தன்னை சாய்பாபா எப்படி ஆட்கொண்டார் என்பதை பற்றியும், பாபா எப்படி தன்னை எப்போதும் வழி நடத்திக் கொண்டி ருக்கிறார் என்பதைப் பற்றியும் உணர்வு பொங்க விவரித்தார்.

தன் வாழ்க்கை முழுவதும் கடமை தவறாமல் கர்மயோகத்தை மட்டும் கடைபிடிக்கும் அவருக்கு பாபா எப்படி சத்சரித்திரம் மூலம் வழிகாட்டி போதனை அளிக்கிறார் என்பதை விவரமாக விளக்கினார். மேலும் ஸ்ரீ சாய் சத்சரித்திரம் என்கிற இந்த நூல் ஒரு முறை பார்த்துவிட்டு வைக்க வேண்டிய நூல் இல்லை என்பதை அழுத்தமாக பதிவு செய்தார்.

இரண்டாவதாக, ஸ்ரீ சாய் சத்சரித்திரம் பக்தி யோகத்தை தான் போதிக்கிறது என்று பேசுவதற்கு 'திருமதி. Dr. சுதா சேஷய்யன்' அழைக்கப்பட்டார். பல்லாயிரக்கணக்கான ஆன்மீக மேடைகளை கண்ட அவர் பக்தி மட்டும்தான் ஆன்மீக முன் னேற்றம் அளிக்கும் என்றும் இதுதான் நடைமுறைக்கு ஏற்ற எளிமையான வழி என்றும் ஆணித்தனமாக பேசினார். மேலும் ஸ்ரீ சாய் சத்சரித்திரம் பக்தியை மட்டும் தான் போதிக்கிறது என்று எடுத்துக்காட்டுகளுடன் விவரித்தார்.

மூன்றாவதாக, ஸ்ரீ சாய் சத்சரித்திரம் ஞான யோகத்தை



தான் போதிக்கிறது என்று பேசுவதற்கு 'திரு. யோகி ஸ்ரீராம் பாபா' வந்தார்கள். ஞான மார்க்கம் என்றால் அதற்கென ஒரு வேகம் இருக்கும். அதற்கேற்றாற்போல் குருவின் பேச்சும் ஒரு வேகத்துடன் தொடங்கியது. முன்னால் சொல்லப்பட்ட அனைத்து விஷயங்களையும் வேறு கோணத்தில் சிந்திக்க வைப்பது தான் ஞான மார்க்கம் என்று விளக்கினார்.

பாராயணம் என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? பக்தி மார்க்கத்தையும் கர்ம மார்க்கத்தையும் எப்படி சரியான முறையில் கடைபிடிக்க வேண்டும் என்பதையும் விவரித்துக் கூறினார். மேலும் அவற்றை சரியாக செய்கிறோமா என்று தற்சோதனை செய்வதுதான் ஞான மார்க்கம் என்று கூறினார். ஆகவே மூன்று மார்க்கங்களும் பின்னிப்பிணைந்து தான் இருக்கிறது, தனிப்பட்டது இல்லை என்று அவருக்கே உரிய எளிய வழியில் விளக்கி, அரங்கத்தின் அனைவரையும் சிந்திக்க வைத்தார்.

இறுதியாக, ராஸலீலாவுடன் நிகழ்ச்சி இரவு சரியாக 8 மணிக்கு இனிதே நிறைவடைந்தது. பரதநாட்டியம் மற்றும் ராஸலீலா ஆடிய சிறுமிகள் அனைவரின் மனதையும் கவர்ந்தனர். நிகழ்ச்சியில் வந்து கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு யூடியூபில் நேரடியாகவும் ஒளிபரப்பானது.

பாராயணத்தை இயந்திரகதியான முறையில் செய்யாமல் அதில் பொதிந்திருக்கும் ஞானத்தை உணர்ந்து கொள்வதன் மூலம் குரு நம்முடன் நேரடியாக தொடர்பு கொள்கிறார் என்பதை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் நன்றாக உணர்ந்து கொண்டனர். இதுபோன்ற அர்த்தமுள்ள நிகழ்ச்சிகளை தொடர்ந்து விழாக்குழுவினர் ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையுடன் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகின்றோம்.

குரு வாழ்க! குருவே துணை!

மருத்துவ குணங்கள் நிறைந்த முடக்கத்தான் கீரை...!



முடக்கத்தான் கீரை மருத்துவ குணங்கள் நிறைந்த ஒரு அரிய வகை கீரையாகும். இது சாதாரணமாக கிராமப் புறங்களில் வேலிகளில் படர்ந்து காணப்படும். இதை தொடர்ந்து உண்டு வந்தால், முடக்கு வாதம், நரம்பு தளர்ச்சி பொன்ற வியாதிகள் நம்மை அண்டாது.

முடக்கத்தான் கீரையில் புரத சத்து, நார்ச்சத்து, கார்போஹைட் ரேட், தாதுப்புகள் நிறைந்து காணப்படுவதால் எலும்புகளின் வளர்ச்சிக்கும், வலிமைக்கும் துணைபுரியும். முடக்கத்தான் கீரையைத் தொடர்ந்து உணவில் சேர்த்துக் கொள்வதன் மூலம் மலக்சிக்கல், மூல நோய்கள், கரப்பான், கிரந்தி, பாதவாதம் போன்ற நோய்கள் குணமாகின்றன.

வாய்வுத் தொல்லையுடைய வர்கள் முடக்கத்தான் கீரையை சாப்பிட்டால் நல்ல பலன் கிடைக்கும். மாதவிடாய் நிற்கும் நிலையில் உள்ள பெண்களுக்கு இந்தக் கீரை மிகவும் நல்லது.

சிலருக்கு 35 வயதுக்கு மேல் காலை படுக்கையை விட்டு எழும்பொழுது இடுப்பு, பாதம், கை, கால் முட்டிகளில் அதிக வலி இருக்கும். இதுதான் ருமாட்டாயிட் ஆர்த்ரைட்டிஸின் ஆரம்ப நிலை. இந்தியாவில் 65 சதவிகித மக்கள் இந்த வகை மூட்டு வலியினால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கு சிறந்த நிவாரணம் முடக்கத்தான் கீரையாகும்.

நமது மூட்டுகளில் எங்கு யூரிக் ஆசிட் இருந்தாலும் அதைக் கரைத்து. சிறு நீரகத்திற்கு எடுத்துச்சென்று விடும். இதுபோல் எடுத்துச்சென்று சிறுநீராக வெளி யேற்றும்போது, அது சோடியம் மற்றும் பொட்டாசியம் இவைகளை நம் உடலிலே விட்டு விடுகிறது. இது ஒரு மிக முக்கியமான இணையான மாற்றத்தை நம் உடலில் ஏற்படுத்து கிறது. இதனால் நமக்கு உடல் சோர்வு ஏற்படுவதில்லை. மூட்டுகளுக்கு சக்தியும் அளிக்கிறது.

முடக்கத்தான் கீரையை



தோசை மாவில் கரைத்து, தோசை செய்து சாப்பிட வேண்டும். அந்தக் கீரையைக் கொதிக்க வைத்து உண்ணக் கூடாது. அதனுள் உள்ள மருத்துவ சத்துக்கள், கொதிக்க வைப்பதின் மூலம் அழிந்து விடும்.

இந்தக் கீரையை விளக் கெண்ணெயில் வதக்கி உண்டால் மூட்டுவலி, கைகால் வலி, முதுகு வலி, உடல் வலி ஆகிய அனைத்து வலிகளும் அகலும். முடக்கத்தான் கீரையுடன் வெல்லம் சேர்த்து நெய்யில் வதக்கி உட்கொண்டால் கண் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகும்.

முடக்கத்தான் கீரையை துவரம் பருப்பு, பாசிப்பருப்பு மற்றும் வேறு பருப்புகளுடன் இந்தக் கீரையைச் சேர்த்துக் கூட்டும் செய்யலாம். கீரை யைச் சாறு எடுத்து சூப்பாகச் சாப் பிடுவது பயன் தரும். மேலும் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும்.

நீர் உள்ள இடங்களில் மட்டுமே இந்தக் கீரை கிடைக்கும். முடக்கத்தான் கீரை, மருத்துவ குணங்கள் நிறைந்த, ஒரு அரிய கீரையாகும். தமிழ்நாட்டு கிராமங்களில், எல்லோர் வீட்டு பின் புறத்திலும் இது படர்ந்து வளர்ந்து கிடக்கும்.

ஆரோக்கியம் தரும் பல்வேறு கீரைகளில் முடக்கத்தான் கீரை யின் பங்கு முக்கியமானது. முடக்கு வாதத்தை நீக்கும் சக்தி இந்தக் கீரைக்கு உண்டு. முடக்கத்தான் இலையை அரைத்து நெல்லிக்காய் அளவு தினமும் உண்டு வந்தால் சொறி, சிரங்கு, கரப்பான் போன்ற சரும வியாதிகள் குணமாகும்.

இந்தக் கீரையை அரைத்து சருமத்தில் பூசி வந்தாலும் சரும நோய்கள் குணமாகும்.

முடக்கத்தான் கீரையை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் புற்றுநோய் வராததுடன், எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். முடக்கத்தான் இலையை விளக் கெண்ணெய் விட்டு வதக்கி நெல்லிக்காய் அளவு எடுத்து பனைவெல்லம் சேர்த்து சாப்பிட்டு வர குடலிறக்கம் குணமாகும்.

முடக்கத்தான் கீரையை அரைத்து சாறு எடுத்து காதில் இரண்டு சொட்டு விட்டால் காது வலி குணமாகும். இவ்வளவு நன்மைகள் நிறைந்த முடக்கத்தான் கீரையைக்கண்டால் விட்டுவிடா தீர்கள். உங்களது உணவில் பயன் படுத்தி வளமோடு வாழுங்கள்.

வாழ்க வளமுடன்! வாழ்க வையகம்!

வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞ்ஞானம் 5

தவத்தின் முடிவினில் நாம் அடைவதே மெய்ஞானம் ஆகும். அதுவே நம் வாழ்வியல் தடைகளை தகர்த்தெறிந்து நெறிகாட்டும் ஞானமாக அமைகின்றது. இந்த ஞானமானது இருமையை அகற்றி, ஒருமையை அருளுகின்றது. அதாவது, கண்ணாடியில் தெரியும் உருவமும், பிரதிபிம்பமும் இரண்டுபோல தோன்றினாலும், உண்மையில் உள்ள ஒருவனே கண்ணாடியில் பிரதிபிம்பமாக தோன்றுகிறான். எல்லாமாகிய பிரம்மமே ஜீவனாகவும் தோன்றுகிறது இதிலிருந்து ஜீவ–ஈஸ்வர ஒற்றுமையானது விளக்கப்படுகிறது.

அதனால் இந்த பிரம்மத்தை வெளியில் தேடி எந்த பிரோயோஜனமும் இல்லை, அது நம்முள் இருக்கிறது, அந்த சக்தியானது ஒடுங்கிக்கிடக்கிறது, வெளிமனதை தெளிவாக்கி, உள்ளே தேடவேண்டும். இதையே ஞானிகளும், சித்தர்களும், மகான்களும், யோகிகளும் "உள் கட" அதுவே "கடவுள்" என்று ஞான மார்க்கத்தை விளக்கினர்.



நாராயணன்

இந்த ஞானமார்க்கத்தை கற்றவன் ஒருபொழுதும் துக்கசாகரத்தில் வீழமாட்டான், பிறப்பு, இறப்பு என்ற இருமை நோயிலிருந்து விடுபடுவான். இது மிக்க யுக்தி அனுபவங்கள் பொருந்தியது, உயர் ஞானத்திற்கு அழைத்துச்செல்வது, இந்த ஞானத்திற்கு ஈடாக எதுவும் கிடையாது. இதிலும் ஒருவனுக்கு ஞானமானது உதிக்கவில்லை அவர்களை அபாக்கியசாலிகள் என்றே கொள்ளவேண்டும்.

குருவானவர் சிஷ்யனுடைய தேகாத்ம (உடல்) பற்றை அகற்றி ஞானநிலையை அடைய பல்வேறு உபாயங்களையும், மனவளக்கலைகளையும் விளக்குகிறார். ஒருவன் பலகோடி பிறவிகளில் செய்த நற்காரியங்களின் பலனாகவே தக்க ஒரு குருவின் துணையுடன், ஞானப்பாதையில் பயணித்து மெய்ஞான பேரின்பத்தினை அடையமுடியும்.

குருமார்கள் கருணையென்ற சாதனத்தை தன்னுள் வைத்துக் கொண்டு, ஞான ஒளியாகிய அனுகிரஹத்தை சிஷ்யர்களுக்கு அருளுகின்றனர், குருவின் கிருபை ஒருவனுக்கு கிடைத்துவிட்டால், பிரம்மபதவியே கிடைத்தாலும் அவனுக்கு அது ஒரு பொருட்டல்ல, மரணத்தை கண்டு அவனுக்கு எந்த ஒரு அச்சமுமில்லை.



உலகநிகழ்வுகளிலிருந்தும், அலை பாய்கின்ற மனதினை ஒருமுகப் படுத்தும் எண்ணத்துடனும், தெளிந்த சிந்தனையை பெற்று ஞானத்தை அடைய நல்லொழுக்க சீலனான சிஷ்யன் ஒருவன், பிரம்மமே உருவமெடுத்த ஒரு சத்குருவை அடைந்து அவரது பாதாரவிந்தங்களில் பணிந்து ஞானமார்க்கத்தை போதிக்கும்படி தனது கண்ணீரால் குருவின் பாதங்களை அலம்புகின்றான்.

சத்குருவான அந்த ஞானயோகி, சிஷ்யனின் தெளிந்த புத்தியை எண்ணி சந்தோஷமடைந்து அவனை தனதருகே அழைத்து அமரவைத்து ஆத்மஞானத்தைப் போதிக்கிறார். பல்வேறு உவமானம், உதாரணத்தினை சொல்லி மெய்ஞானத்தின் பெருமையை விளக்கி ஆத்மஞானமே மோக்ஷசாதனம், அதுவே தன்னை உணரும் வழி என்பதை உறுதியாக எடுத்துரைக்கிறார்.

சத்குருவானவர் சிஷ்யனை நோக்கி, "குழந்தாய் ஏன் இந்த கலக்கம்? மனஉளைச்சல்? உன்னுடைய கேள்வி தான் என்ன சொல்?" என்று கேட்க, சிஷ்யன் சத்குருவை நோக்கி, ஸ்ரீகுரு, கர்மயோகம், பக்தியோக மார்க்கங்களில் ஈடுபட்டும் என்மனமானது அமைதியடையவில்லை ஒரு இயந்திரம் போல இந்த உடம்பானது யாவற்றையும் மேற்கொள்ளுகிறது, பலசமயங்களில் நான் செய்கிறேன், என்னுடையது என்ற அகங்காரமும் வந்தடைகிறது.

செய்யும் எல்லா செயல்களிலும் ஏதோ ஒன்றை எதிர்பார்த்து மட்டுமே மனிதன் கடமைகளை நிறைவேற்றுகிறான். அந்த எதிர்பார்ப்பு நிறைவேறாவிட்டால் மனமுடைந்து வருத்தமும்

அடைகிறான், கோபமுறுகிறான், மற்றவர்களை குறைசொல்லுகிறான். ஏன் இந்த நிலை? எதை அடைந்தால் அகங்காரம் ஏற்படாது, எதனை அடைந்தால் மனம் அமைதிபெறும், எது நிலையான பேரின்பத்தை நல்கும். இதுவே என் கேள்வி, ஸ்ரீகுருவாகிய தாங்களே எனக்கு நல்லதொரு நெறியை காட்டியருளவேண்டும்.

சத்குருவாகிய சச்சிதானந்த பரம்பொருள், சிஷ்யனை புன்முறுவலுடன் ஆயிரம் தாய்மார்களின் கருணையோடுகூடிய அருட்பார்வையினால் உற்று நோக்கி, எதை நீ வேண்டும் என்கிறாயோ அதுவே நீ. எது நீ என்னிடம் இல்லையென்கிறாயோ அது "உள்ளங்கை நெல்லிக்கனிபோல்" உன்னிடமே உள்ளது. தெளிந்த குட்டையில் தான் நீர் பருகமுடியும், அசைவில்லா, தெளிந்த, விசார மனதினால் மட்டுமே ஞானத்தை அடையமுடியும்.

கடமைகளை இடைவிடாமல் செய்வது, பக்திமார்க்கத்தில் ஈடுபட்டு ஜப, தப, விரத முறைகளை பின்பற்றுவது இவையாவும் ஆரம்பநிலை கல்வியாகும். மனிதனை நல்மார்க்கத்தில் பயணிக்க மேற்சொன்ன முறைகளானது பெரிதும் உதவி புரிகிறது என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஆனால், அதுவே இறுதி இலக்கா? அது பேரின்ப பெறுவாழ்வளிக்குமா? மோக்ஷ சாதனமாகுமா? என்றால்,இல்லை என்ற பதிலே உண்மையானது.

மாயாமோஹத்தால் சூழப்பட்ட இந்த உலகத்தில் மனிதன் எதை தேடுகிறோம் என்பதறியாது சுற்றுகிறான், இங்கு எதுவும் நிலையில்லை என்பதனை உணரத் தவறுகிறான். நிலையற்றதை, நிலையானது என்று நம்பி அதனை தேடினால் கிடைப்பது என்ன? ஏமாற்றம் மட்டுமே அல்லவா. கானல்நீரை உண்மை என்று எண்ணி பருக நினைத்தால் விளைவது ஏமாற்றம் மட்டுமே.

உண்மை பரம்பொருளாகிய இறைத்தன்மையை அடைவதே அறிவின் தெளிவு, அதுவே ஞானம். அதை தவிர்த்து அனைத்தும் மாயையின் விளையாட்டே, அதில் உண்மைதன்மையை அறியமுயலுவது என்பது குருடன் கை விளக்குபோலாகும், ஏதேனும் பயன் உண்டா? இல்லையல்லவா, என்றார் ஸ்ரீகுருநாதர்.

அப்பொழுது சிஷ்யன், இந்த மாயஉலகத்தின் நடவடிக்கையை என்னால் ஊகிக்கமுடியவில்லை, இந்த பிரபஞ்சம் எதிலிருந்து உருவானது? எதில் ஒடுங்குகிறது? எங்கு நிலைபெறுகிறது? நீங்கள் சொல்வதின்படி காணும்பொழுது இந்த உலகம் முழுவதுமே நிலையற்றதன்மையாகவே இருக்கின்றது. ஆனால், உலகவிவகாரங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

மனிதன் சிறுவயதில் ஒருவிதமான குணவிகாரங்களோடும், சிறிது வளர்ந்தவுடன் வேறுவிதமான குணநலன்களோடும், வயதுமுதிர்ந்தவுடன் ஒருவிதமாகவும் நாளுக்கு நாள் மாறுபாடு அடைவது எதனால்? எப்பொழுது அவனுக்கு உண்மை புலப்படும்? அற்பச்



செயல்பாட்டிலிருந்து எப்பொழுது வெளிவருவான் என்பதனை நீங்கள் எனக்கு தெளிவுபடுத்தவேண்டும்.

இதனை கேட்ட ஸ்ரீகுருநாதர் சிஷ்யனே, நல்லதொரு கேள்வி கேட்டு விசாரமார்க்கத்தில் பயணிகத் தொடங்கியிருக்கின்றாய் மிக்க மகிழ்ச்சி. நல்ல சீடனுக்கு அழகு விசாரமனம். அது உன்னிடம் உள்ளது, நான் கூறுவதை கவனமாக கேட்டு தெளிவாயாக. இந்த மானிடப்பிறவி என்பது அரிதிலும் அரிது, ஆயிரம்கோடி பிறவியின் நற்செயல்களின் பலனே. ஆனால் இதனை அறியாத மனிதன் செய்யும் காரியங்களின் பலனையடைவதே உத்தமம் என்று ஏதேனும் ஒரு செயலில் ஈடுபட்டு அதனையே நலம் என்றெண்ணி கொள்கின்றான்.

உதாரணமாக சொல்லவேண்டுமானால், பூஜை செய்பவன் பலவருடங்களாக அதனை செய்தவண்ணம் இருக்கிறான், இதுபோன்றே யாக, யக்ஞங்கள் செய்பவனும் தொடர்ந்து அந்தக் கிரியைகளை செய்தவண்ணம் இருக்கிறான். இதுபோலவே, சடங்குகள், ஜபம், புனஸ்காரம் மற்றும் உபாசனை என்று இந்த பட்டியலானது நீண்டுகொண்டே போகிறது.

காலப்போக்கில் இந்த செயல்கள் அனைத்தும் ஒரு கடமையைபோலாகி இயந்திரத்தனமாக செய்கிறானே தவிர, ஆத்மார்த்தமாகவும், இறைத்தன்மை உணர்வோடும் செய்யத்தவறுகிறான். இது ஏன் இப்படி நடக்கிறதென்றால், மனிதன் அதனில் பலனை எதிர்நோக்கி காரியங்களை செய்கிறான். அதிலிருந்து கிடைக்கும் பலன் நன்மையை அளிக்கும் என்றும்,

சுகத்தை கொடுக்கும் என்றும் நம்புகிறான்.

அறியாமையின் காரணமாக மனிதன் உலகவாழ்கையில் தான் இன்பம் உள்ளதென்று நம்பி பரம்பொருளை அறியாமல் அற்பமான பொருள்களுக்கு ஆசைப்பட்டு, அதை சம்பாதிக்க வேலை செய்து கடினஉழைப்பின் பெயரில் அந்தப் பொருளை ஈட்டுகிறான். பலகாலமாக கடின உழைப்பின் பெயரில் ஈட்டிய அந்தப்பொருளானது சுகத்தை கொடுத்ததா என்றால் இல்லை, துக்கத்தையே கொடுக்கின்றது.

இப்படியாக, துக்கத்தையே அடைந்தாலும் மேலும் மேலும் பொருளாதாரத்தை மேம்படுத்த எண்ணி அதன்மூலம் சுகம் உண்டாகும் என்று நம்பி, பல இடங்களுக்கும், தேசங்களுக்கும் அலைந்துதிரிகின்றான். இதனால் என்ன பயனை அடைகிறான்? இதனால் அவனுக்கு ஆத்மஅமைதி கிடைக்கிறதா?

ஏதேனும் ஒரு காரியத்தை செய்தால் அதனால் சுகமும் கிடைத்தால் ஏன் மனிதன் இன்னொரு பொருளை தேடி அலைய வேண்டும்? மகனே! இதனால் நான் சொல்கிறேன். உண்மையில் இந்த மனிதயினமே துக்கத்தில் தான் உள்ளது. உலகப்பொருள்களை தேடுதலினால் அவனுக்கு திருப்தி என்பது கிடைப்பதேயில்லை.

சரி, அப்படியே மனிதன் ஒருபலனை கருதி செயலில் ஈடுபட்டாலும் அந்த செயல் அவனை துக்கத்திலிருந்து வெளிக்கொணர்ந்து இன்பத்தை கூட்டினால் தான் அது உண்மையான பலனாகும் அல்லவா? அப்படி துக்கம் விலக்கப்படுகிறதா இல்லையே! எவன் ஒருவனுக்கு எப்பொழுதும் ஒரு காரியத்தின் மீதே நாட்டம் உண்டாகிறதோ, அவனுக்கு நிச்சயமாக துக்கநாசம் ஏற்படுவதேயில்லை.

பிச்சையெடுப்பவனும் நாள் தோறும் உணவுக்காக உழைக்கிறான். நாடாளும் சக்கரவர்த்தியும் சுகத்தின்பொருட்டு உழைக்கிறான். இவ்விருவரும் சுகத்தை இறுதியில் அடைந்தார்களாயென்றால் இல்லை. மகனே! பின்பு எதனால் சுகம் கிடைக்கும் என்றாயே, தீவிர விசாரத்தினால் (கேள்வி, எண்ணம், சிந்தனை) ஞானத்தை அடைவதனால் மட்டுமே ஒருவனால் நிலையான சுகத்தை அடையமுடியும். அதுமட்டுமே மனிதனை இறைத்தமையோடு இணைக்கவல்லது, இறைத் தன்மையாகவே மாற்றவல்லது.

ஐயனே! தயாநிதியே! கருணைக் கடலே! என்னுடைய குழப்பமான மனதின் சந்தேகங்களை நீங்களே தீர்த்து அருள வேண்டும். குருவின் அனுமதியின் பெயரில் அதனை வெளியிடுகின்றேன் என்று சிஷ்யன் ஸ்ரீகுருவின் பாதரவிந்தங்களை இறுகப்பற்றிக் கொண்டான். கருணைபொழியும் விழிகளால் சிஷ்யனைநோக்கி ஸ்ரீகுருதேவர், மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன், உன் சந்தேகங்களை கேள். அதற்கு நான் விளக்கமளிக்கின்றேன் என்றார்.

தொடரும்

பாபாவை உணர்ந்து கொள்ளுங்கள்

பாபாவை குறிப்பிட்ட சில ஆலயத்தில் மட்டும் மிகவும் விசேசமான சக்திகள் கொண்டவராக உருவகப்படுத்துவது, மேலும் பக்தர்களின் பிரார்த்தனைகளை பாபாவிடம் எடுத்துக்கூறும் பிரதிநிதிகள் போன்ற மனப்போக்கில் நடந்து கொள்வது என்று சிலர் செயல்படுகின்றனர்.

உண்மை அதுவல்ல, எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் எல்லோருடைய வேண்டுதல்களும், துயரங்களுக்கும், பாபா செவி சாய்கின்றார். பக்தர்களுடைய வேண்டுதல்களையும் நிறைவேற்றி வருகின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக பக்தர்களை பாபா தமது குழந்தைகளைப் போலவே நேசிக்கின்றார் நேசித்தும் வருகின்றார்.

ஒரு சமயம் பாபா தனதருகே தூங்கிய ஒரு குழந்தையை சுட்டிக்காட்டி, இக்குழந்தை தூங்கும் போது நாம் அருகில் இருக்க வேண்டும். விழித்திருந்து கவனித்து சிரமம் ஏற்க வேண்டும் எனக்கூறினார். பக்தர்களின் பால் பாபாவின் அக்கறை அத்தகையது. எப்போதுமே பாபா தமது பக்தர்களின் பின்னாலேயே



இருந்து பக்தர்களை பாதுகாத்து வருகின்றார். இதுவே உண்மை. இதில் முழு நம்பிக்கை கொள்ளுங்கள். இந்த உண்மையை கிரகித்துக்கொள்ளும் போதுதான் உங்கள் மனதில் அச்சம், கவலை எதுவும் இல்லாது போகும். ●

வாசகர் குரல்...

நெஞ்சுக்கு நிம்மதியை தருகிறது


இம்மாத புத்தகத்தின் அட்டைப்படம் மிகவும் அற்புதமாக இருந்தது. அமுதமொழி சாயியின் அருமருந்து. திருவருள் தேடி சிறப்பாக இருந்தது. திரு. சுந்தர்சாய்க்கு நன்றி! புத்தகத்தின் பரிணாம வளர்ச்சி கட்டுரை அழகு. திருமதி. மாதங்கி பாலாஜி அவர்களுக்கு மனம் நிறைந்த பாராட்டுக்கள். எனது ஞான குருவும் ஆசிரியருமான யோகி ஸ்ரீராம் பாபா அவர்களின் புத்தகம் உலகின் மூலை முடுக்குகளில் எல்லாம் சென்று பாபாவின் புகழை சேர்க்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

– திருமதி இந்துமதி, அயனாவரம்.

புத்தகத்தை திறந்ததும் கண்ணில் தென்படுகின்ற சாய் நாதரின் அமுத மொழி நெஞ்சுக்கு நிம்மதியைத் தருகின்றது. அதைப்போலவே யோகி ஸ்ரீராம் பாபாவின் இனிய மொழிகள் அனைத்தும் அருமை. தேனில் நனைக்கப்பட்ட பழாச்சுளைகளைப் போன்று இனித்தன. தேதி வாரியாக தொகுத்தளித்த ஜெயந்தி ஸ்ரீராம் அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகள்.

- திருமதி திலகவதி, பட்டுக்கோட்டை.

அமுத மொழி அற்புதம். பாபா காட்டும் பாதை, கடலில் குதித்த பாபா கட்டுரைகள் மிகவும் அருமையாக இருந்தது. இது



போன்று ஒவ்வொரு மாதமும் சாயி கதைகள் மூன்றாவது வெளியிடுங்கள்.

– திரு. சரண்ராஜா, வேலூர்.

ஒவ்வொரு மாதமும் தங்களது பத்திரிக்கைகாக மிக ஆவலோடு காத்திருக்கும் வாசகி நான். புத்தகம் வந்த உடனே படித்து முடித்துவிடுவேன். இப்போதெல்லாம் எனக்கு புத்தகம் இன்னும் அதிக பக்கங்கள் இருந்தால் நன்றாக இருக்குமே என்று தோன்றுகின்றது. இன்றைய காலகட்டத்தில் புத்தகம் நடத்துவதென்பது சிரமமான

காரியம்தான். இருந்தாலும் பாபாவின் பாரத்தைப் போட்டு சிறிது பக்கங்களை அதிகரித்தால் மிகவும் நன்றாக இருக்கும்.

திருமதி. சுந்தரி. திருகாட்டுப்பள்ளி.

திரு. நாராயணன் அவர்கள் எழுதும் வாழ்வியல் நெறிகாட்டும் மெய்ஞானம் தொடர் மிக சிறப்பாக இருக்கின்றது. மிக ஆழமான தத்துவ வரிகளை மிக எளிமையாக விளக்கியிருக்கின்றார். அவருக்கு வாழ்த்துக்கள். அதைப்போலவே ஆசிரியர் அவர்களின் சாய் சரிதமும் மிக இயல்பான நடையில் எளிமையாக புரியும்படி இருக்கின்றது. ஆசிரியருக்கும் நெஞ் சார்ந்த நன்றிகள்!

– திரு. பாலகுமார். திருவள்ளூர்.

வியாபார நோக்கமில்லாது எட்டு ஆண்டுகளாக உங்களது இதழ் வெளிவருவதென்பது மிகவும் ஆச்சரிமாக உள்ளது. நிச்சயம் இது பாபாவின் ஆசீர்வாதம்தான். இம்மாதத்தில் இருந்து புத்தகத்திற்கு என்னாலான காணிக்கையை அனுப்பவேண்டும் என்று நினைத்திருக்கின்றேன். சாயிநாதர் கருணை வைக்கட்டும்.

– திரு. சண்முகராஜா, தஞ்சை.

என் பெயர் செல்வம். சொந்த ஊர் சுவாமிமலை. கடந்தமாதம் என் குடும்ப பிரச்சினையில் அனைவரும் என்னைப் புறக்கணிப்பதாக எண்ணி மிகுந்த மனவேதனையில் இருந்தேன். எதார்த்தமாக சாயி மகராஜ் குருவைத்தேடி இதழைப் படிக்க நேர்ந்தது அதில் வெளியான "யார் உன்னைப் புறக்கணித்தார்கள்" என்ற கட்டுரை என் மனபிம்பத்தையே மாற்றி விட்டது. மிக்க நன்றி ஆசிரியர் அவர்களே! உங்களது பணி சிறக்க வாழ்த்துக்கள்.

– திரு. மருதவாணன், திருச்சிற்றம்பலம்.

சாய் மகராஜ் குருவைத்தேடி ஆன்மீக மாத இதழின் எட்டாம் ஆண்டு துவக்க விழாவிற்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்கள். தங்களது சாய் சேவை மேன்மேலும் வளர்ந்து அநேக சாய் பக்தர்களும், பொதுமக்களும் பயன்பெற வேண்டும் என்று சாய்பாபாவிடம் பிரார்துதிக்கின்றோம்.

– திரு. மணி குடும்பத்தார், குடந்தை.

ஆசிரியர் அவர்களுக்கு எட்டாம் ஆண்டு துவக்க விழா வாழ்த்துக்கள். சாயியின் புகழ்பரம்பும் மாத இதழ் பல்லாண்டு காலம் தொடர்ந்து வெளிவர வாழ்துகின்றோம்.

– திரு. கதிர்வேல் குடும்பத்தார் சீர்காழ்

வாசகர்கள் தங்களது மேலான கருத்துக்களை " வாசகர் குரலில்" பதிவிட, கீழ்கண்ட வாட்ஸ் அப் நம்பருக்கு எழுதி அனுப்பும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சாயிமகராஜ் குருவைதேடி இணையத்தில் படிக்க... www.saidhyanalaya.org

சாய் தியானா வாட்ஸ் அப் நம்பர் 9941816692

அன்னதான சேவை



அன்னதான சேவையில் நீங்களும் பங்குபெற விரும்பினால் காணிக்கை அனுப்பி உதவலாம்.

G- PAY NO: 9941816692

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. பாலகிருஷ்ணன், அண்ணாநகர். ரூ.3000.

திரு. சுவாமிநாதன் பிரவீணா குடும்பத்தார். ரூ.3000.

திருமதி. ஹேமாவதி நமச்சிவாயம், சாலிகிராமம். ரூ.2000.

திருமதி. உமா மகேஸ்வரி, அயனாவரம். ரூ.2000.

திரு. ஆர். முகுல். கோவை. ரூ.1000.

திருமதி.ராதா கணபதி,வேளச்சேரி. ரூ.1000.

திருமதி. அர்ச்சனா, ரூ.1000.

திரு. ஆர். முகுல், கோவை. ரூ.1000.

திரு. சாய் மகராஜ். சென்னை. ரூ.1000.

திருமதி. வித்யா நவீன், சென்னை. ரூ.1000

திருமதி. மகாலட்சுமி பொன்முருகன், மதுரை ரூ.1000

திருமதி.நித்யா ராஜேந்திரன், கூடுவாஞ்சேரி. ரூ.500.

திரு. சாய்கிருபா, வாடிப்பட்டி, ரூ.500.

திருமதி.நேத்ராலட்சுமி. கோவை.ரூ.500.

திருமதி. உமா, சின்னாளப்பட்டி. ரூ.500.

திரு. பாபா மாஸ்டர். பாண்டிச்சேரி.ரூ.500.

திரு. பாபு லதா, வேப்பம்பட்டு, ரூ.500.

திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.

திரு. கோபால்சாய், விருகம்பாக்கம்.ரூ.200

திருமதி. உமா விஜய் ஆனந்த், அயனாவரம். ரூ.200.

திருமதி. ஜெயலட்சுமி, அயனாவரம். ரூ.200.

திரு. நிர்மலா, மனேஜர், சி.சி.பேங்க், பெரியார் நகர்.ரூ.200.

திரு.குமரன் ஸ்டோர்ஸ் – டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.

திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட். கொளத்தூர். ரூ.200.

திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.

திருமதி. பிச்சையம்மாள். பெரம்பூர். ரூ.100

திருமதி. திலகா ஷ்யாம்சுந்தர், முகலிவாக்கம். ரூ.101.

திரு. அகஸ்டின், குன்றத்தூர். அரிசி.

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின்
ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* **1 வருட சந்தா** – **ரூ.320**
(தபால் செலவு உள்ளட)

* **3 வருட சந்தா** – **ரூ.850**
(தபால் செலவு உள்ளட)

* **5 வருட சந்தா** – **ரூ.1,400**
(தபால் செலவு உள்ளட)

* **ஆயுள் சந்தா** – **ரூ.3,000**
(தபால் செலவு உள்ளட)

V.ஸ்ரீராம், ஆசிரியர்

99418 16692, 88258 31068

'சாயி மகராஜ் குருவை தேடி',

9/1A, பழனியப்பா இரண்டாவது தெரு,

அயனாவரம், சென்னை – 600023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM

INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai

AC.No: 6219480677

IFS Code No: IDIB000P056.

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.

சாய் ராஜயோகாவின் தயாரிப்பு



அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.


குப்பைமேனித் தைலம்

அனைத்துவிதமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068